ஒரு வஸ்துவின் சொரூபத்தை அறிந்துகொள்வது ஞானம். அதுவே முதல்படி.

அந்த வஸ்துவின் சிறப்பியல்புகளை ஆராய்ந்து அறிவது விஞ்ஞானம். அது இரண்டாவது படி.

வஸ்துவின் சாரமான உட்பொருளை (அதாவது, எதைத் தெரிந்துகொண்டால் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டதாக ஆகுமோ, அப்புறம் வேறு எதனையுமே தெரிந்து கொள்ளவேண்டியது இருக்காதோ, அதை)த் தெரிந்து கொள்வது பிரஞ்ஞானம். அதுதான் மூன்ருவது படி.

ஞானத்திலும் விஞ்ஞானத்திலும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். ஆனுல் பிரஞ்ஞானத்தில் ஏற்றத்தாழ்வுகள் இரா. அது எப்போதும் ஒரே மாதிரியாகவே இருக்கும்.

ஞானமும் விஞ்ஞானமும் விருப்பு வெறுப்புகளைத் தோற்றுவிக்கக் கூடியவை. பிரஞ்ஞானம் அப்படி அல்ல. அது விருப்பையும் வெறுப்பையும்கடந்த சமத்வ புத்தியை உண்டுபண்ணக் கூடியது.

ஞானமும் விஞ்ஞானமும் அமைதியின்மையைத் தோற்றுவிக்கக் கூடியவை. பிரஞ்ஞானம் ஒன்றுதான் அமைதியைத் தோற்றுவிப்பது.

ஞானமும் விஞ்ஞானமும் மனிதனுக்கு மன நிறைவை உண்டு பண்ணுவதில்லை. பிரஞ்ஞானமே மனநிறைவை உண்டுபண்ணுகிறது.

இந்த உண்மைகளையெல்லாம் நன்கு உணர்ந்திருந்தமையால், நமது முன்னோர்கள் ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் காட்டிலும், பிரஞ்ஞானத்துக்கே அதிகமான முக்கியத்துவத்தை அளித்திருந்தார்கள். அந்தப் பிரஞ்ஞானத்தை அடைவதற்கான வழிவகைகளையும் நமக்கு வகுத்துக் கொடுத்தார்கள்.

ஆனுல், இன்று நாம் விஞ்ஞானத்தையே உயர்வுடையதாக எண்ணிச் செயல்பட்டு வருகிருேம். அதுதான் இப்போதைய யுக தர்மம் போலும். ஆகையால் அதை நான் தவறு என்று கூறவில்லை. இருந்தாலும், சிம்மாவலோகன நியாயத்தையும் சிறிது அனுசரித்துச் செயல்படுவோமானுல், அதனுல் பல நன்மைகள் ஏற்படும்.

அதாவது, நாம் விஞ்ஞானத்தில் தீவிரமாக முன்னேக்கிச்செல்லும் சமயத்திலேயே, நமது பார்வையைச் சிறிது பின்னேக்கியும் செலுத்தவேண்டும். இதையே இன்னெருவிதமாகச் சொன்னுல், மூதறிஞர்களான நமதுமுன்னேர்கள் வகுத்துக் கொடுத்துள்ள சில வழிமுறைகளைக் கைவிட்டு விடாமலே, இன்றைய முற்போக்கு வாழ்க்கையை நாம் நடத்திச் செல்வது நலமாய் இருக்கும்.

இதனை ஓர் உதாரணத்தால் விளக்கலாம்.

இன்று நாம் விஞ்ஞானரீதியான குடும்பக் கட்டுப்பாட்டில் ஈடுபடுகிருேம். அதற்காக எத்தனையோ மருந்து மாத்திரைகளைச் சாப்பிடுகிருேம். கருத்தடைக் கருவிகளையும் அறுவை மருத்துவ முறைகளையும் கையாளுகிருேம். ஆனுல், இதே குடும்பக் கட்டுப்பாட்டிற்காக நமது முன்னேர்கள் எத்தகைய முறைகளைக் கையாண்டார்கள் என்பதை, நாம் சிறிதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.


மருந்துகளையும் கருவிகளையும் காட்டிலும், மனத்தை அடக்குவதுதான் எல்லா வகையிலும் சிறந்த உபாயம் என்று அவர்கள்

தெரிந்து வைத்திருந்தார்கள். அவ்வாறு மனத்தை அடக்குவதற்கான வழிகளையும், அவர்கள் நமக்கு வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

வேறு ஒன்றும் வேண்டாம். கணவனும் மனைவியும் இன்ன இன்ன காலங்களில்தான் இல்லற உறவில் ஈடுபடலாம், இன்ன இன்ன காலங்களில் ஈடுபடக் கூடாது என்று நமது அற நூல்களில்விதிக்கப்பட்டுள்ளது. அந்த ஒரு விதியைக் கடைப்பிடித்தாலே, குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி தம்பதிகள் கவலைப் பட வேண்டியஅவசியம் இராது. முற்காலத்தில், குழந்தைகள் இப்படி அளவுக்கு மிஞ்சிப் பிறந்ததில்லை. மகப்பேற்றுக்காகக் கணவன் மனைவியர் நோன்பு இயற்றிய காலம் அது. குழந்தைகள் அருமருந்துகளாகவும், அரும் பெருஞ்செல்வங்களாகவும் போற்றப்பட்ட பொற்காலம் அது. அதே பொற்காலத்தை இன்றைக்கும் நாம் கொண்டு வந்து விடலாம், நமது அற நூல்களில் கூறப்பட்டுள்ள சில விதிகளை மட்டும் கடைப்பிடிப்போமானால்!

மன அடக்கம், புலனடக்கம் போன்ற உபாயங்களை நாம் பயின்று கையாள்வோமானால், நாம் புண்ணியவான்கள் ஆகிறோம். இறுதியில், பிரஞ்ஞானம் கைவரப்பெற்ற புனிதவான்களாகவும் ஆகிவிடுகிறோம்.

நம் அனுபவங்களே அறிவை மறைக்கின்றன



வேலவன்

உலகிலுள்ள எல்லா மனிதர்களின் அறிவும், இயல்பிலே தூய்மையானதுதான். ஆனால் சூரியனை மேகங்கள் மறைப்பது போல, அதைப் பல மாசுகள் மறைத்துக் கொண்டிருக்கின்றன. இந்த மாசுகள் எப்படி ஏற்பட்டன?

தெனாலிராமன் பூனைக்குட்டி வளர்த்த கதை, நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

அரசர் அவனிடம் ஒரு பூனைக் குட்டியைக் கொடுத்து வளர்க்கச் சொன்னார். அந்தக் குட்டிக்கு வேண்டிய பாலுக்காக, ஒரு பசு மாட்டையும் கொடுத்திருந்தார்.

தெனாலிராமன் அந்தப் பசுவின் பாலைக் கறந்து, அதைக் கொதிக்கக் கொதிக்கக் காய்ச்சி, அந்தப் பூனைக்குட்டியின் எதிரில் கொண்டு போய் வைத்தான்.

பூனைக்குட்டி அதைக் குடிப்பதற்காக வாயை வைத்ததுதான் தாமதம்; கொதிக்கின்ற பால் அதன் நாக்கைப் சுட்டுப் பொசுக்கி விட்டது. பூனை கத்திக் கொண்டே ஓடிவிட்டது.

அது முதற்கொண்டு, பாலைக் கண்டாலே அந்தப் பூனை பயந்தோடலாயிற்று. இது தெனாலிராமனுக்கு ரொம்ப வசதியாய்ப் போயிற்று; பசுவில் கறந்த பாலையெல்லாம் அவன் தானே குடித்துக் கொழுத்து வரலானான்.

பூனைக்குட்டியோ, பால் குடிக்காமல் நாளுக்கு நாள் மெலிந்து கொண்டு வரலாயிற்று.

ஒரு நாள் அரசர் வந்தார். அந்தப் பூனைக்குட்டியைப் பார்த்தார். அது எலும்பும் தோலுமாயிருப்பதைக் கண்டு ஆத்திரமடைந்தார்.

''இந்தப் பூனைக்குட்டி ஏன் இப்படி இளைத்துப் போயிருக்

கிறது? இதற்கு நீ பால் வைப்பதுண்டா, இல்லையா?'' என்று அவனைக் கோபத்தோடு கேட்டார்.

''அரசே! நான் இதற்கு வேளை தவறாமல் பால் வைத்துக்கொண்டுதான் வருகிறேன். ஆனால் இது குடிக்கவே மாட்டேன் என்கிறது. பாலைக் கண்ணால் கண்டாலே காதவழிக்கு அப்பால் ஓடிப்போய் விடுகிறது. இதற்கு நான் என்ன செய்வேன், சொல்லுங்கள்?'' என்று பதில் அளித்தான் தெனாலிராமன்.

அரசன் அவன் வார்த்தையைச் சிறிதும் நம்பவில்லை. ''நீ சொல்வது மிகவும் வேடிக்கையாயிருக்கிறதே? பூனைக்குட்டியாவது, பாலைக் கண்டு பயந்தோடுவதாவது? எங்கே, கொஞ்சம் பால் கொண்டுவா! அதை இப்போதே பரீட்சித்துப் பார்த்து விடுகிறேன்!'' என்றார் அவர்.

அவ்வாறே பால் கொண்டு வரப்பட்டது. அந்தப் பூனைக்குட்டியும் பிடித்து வரப்பட்டது. அரசரே தன் கையால் பாற்கிண்ணத்தையெடுத்துக்கொண்டு போய்ப்பூனைக்குட்டியின் எதிரில் வைத்தார்.

அந்தப் பாலைக் கண்டதும், பூனை எடுத்துவிட்டது ஓட்டம்!

அரசருக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை! ''சரிதான்; சில பூனைகள் பசுவின் பாலைக் கண்டாலே பயந்தோடி விடும் போலிருக்கிறது!'' என்று அவர் தமக்குத் தாமே தீர்மானித்துக் கொண்டார்.

இந்தப் பூனைக்குட்டியையும் அரசரையும் போலத்தான், நம்முடைய அனுபலங்களிலிருந்து நாம் சில ''சிரிய உண்மை''களைத் தெரிந்து கொண்டு விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கிறோம்!

தெனாலிராமன் காய்ச்சிவைத்த பாலைக் குடித்துச் சூடுபட்ட அனுபவத்தின் காரணமாக, எல்லாப் பாலுமே இப்படித்தான் நெருப்புக் குழம்பாயிருக்கும் என்று திண்ணமாய்த் தீர்மானித்துவிட்டது அந்தப் பூனைக்குட்டி. இந்தத் தவறான கருத்துத்தான், அதன் தூய அறிவை மறைத்து நிற்கும் மாசு என்று சொல்லப்படுவது!

அதே போல, அந்தப் பூனையின் செய்கையைப் பார்த்து விட்டு, ''பசுவின் பாலைக் கண்டாலே பயந்தோடுவது சில பூனைகளின் இயல்பு போலும்!'' என்று முடிவு கட்டிவிட்டார் அரசர். எவ்வளவு தப்பான முடிபு! இந்த முடிபுதான் அவருடைய தூய அறிவை மறைத்து நிற்கும் மாசு எனப்படுவது!

அனுபவசாலிகள் அறிவாளிகளா?

பூனைக்குட்டியும் சரியே, அரசரும் சரியே, இத்தகைய தவறான கருத்துக்களைக் கொள்வதற்குக் காரணம், அவர்களுடைய சொந்த அனுபவங்களேயல்லவா?

அனுபவங்களாலேயே ஒரு மனிதன் அறிவாளியாகிறான் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. அதனால்தான் எந்த விஷயத்திலும் அனுபவசாலிகளுக்கு நாம் அதிக மதிப்பளிக்கிறோம். வயதில் முதிய பெரியவர்களுக்கு மதிக்களிக்கப்படுவதும், அவர்களது அனுபவத்தின்பொருட்டேயென்பதில் ஐயமில்லை. ஆனால் இந்தப் பூனைக்குட்டியையும் அரசரையும் பார்க்கும்போது, மனிதன் தன்னுடைய அனுபவங்களுக்கு அவ்வளவு மதிப்பு வைப்பது அறிவுடைமைதானா என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது அல்லவா?

கணவன் மனைவியர் எப்படி வாழ வேண்டும்?



மகான் காந்தியடிகள்

உண்மையான அலங்காரம் என்பது, உடம்பு முழுவதும் உலோகத்தையும் கற்களையும் சுமந்து கொண்டிருப்பது அல்ல, இருதயத்தைச் சுத்தப்படுத்தி ஆத்மாவின் அழகைப் பெருக்கிக் கொள்வதேயாகும் என்பதைப் பெண்கள் உணர வேண்டும்!

பெண்ணானவள் ஆடவனோடு சரிசமமான பங்காளியாக விளங்க வேண்டுமென்றால், அவள் தன் கணவன் உட்பட ஆடவர் அனைவரின் கண்களுக்காகத் தன்னை அலங்கரித்துக் கொள்வதைப் புறக்கணித்துவிட வேண்டும்.

சீதை தன் உடற் கவர்ச்சிகளின் மூலம் ராமனைத் திருப்திப் படுத்துவதற்காக, ஒரு கணமேனும் வீணாக்கியிருப்பாளா என்பதை கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது.

தற்கால நாகரிக நங்கையோ, மழை வெயில் காற்று முதலானவற்றிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்காக ஆடைகளை அணிவதில்லை; பார்ப்பவரின் கவனத்தைத் தன் வசம் கவர்ந்திழுப்பதற்காக அணிகிறாள்.

சென்னையைப் போன்ற உஷ்ணமான பிரதேசத்தில், பட்டாடையைப்போன்ற ஆரோக்கியக் குறைவான ஆடை வேறெதுமில்லை.

மனம் வாக்கு செயல் அனைத்திலும் கணவன் மனைவியராகிய உங்களிடம் பரிபூரணமான ஒற்றுமை நிலவட்டும். ஒருவரிடமிருந்து ஒருவர் மறைக்கும்படியான எந்த இரகசியமும் உங்களிடம் இராதிருக்கட்டும். நீங்களிருவரும் ஒருவராகவே ஆகிவிடுங்கள்.

கணவன் மனைவியர் இருவரும் ஒருவருக்கொருவர் எஜமானராகவும், பரஸ்பரம் கூட்டாளிகளாகவும், வாழ்க்கையின் காரியங்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதில் பரஸ்பரம் ஒத்துழைக்கும் துணைவர்களாகவும் விளங்குதல் வேண்டும்.

கணவனும் மனைவியும் பரஸ்பர நன்மை தீமைகளுக்குச் சரிசமமான பங்காளிகள் என்பதைவிட, தெளிவான விஷயம் வேறு என்ன இருக்கிறது!

இலட்சிய மனைவியாக சீதையையும், இலட்சியக் கணவனாக இராமனையும் நான் கருதி வருகிறேன். ஆனால் இராமனுக்குச் சீதை அடிமையாகவோ, அல்லது இருவரும் ஒருவருக்கொருவர் அடிமையாகவோ வாழ்க்கை நடத்தியதில்லை!

கணவன் மனைவியர் ஒருவருக்கொருவர் ஆற்ற வேண்டிய கடமைகளும், உலகிற்கு ஆற்றவேண்டிய கடமைகளும், ஒரே மாதிரியானதாகவும், பரஸ்பர உற்சாகமுள்ளதாகவும் இருக்க வேண்டும்

குடும்பத்திற்குத் தேவையானதைச் சம்பாதிப்பது கணவனுடைய வேலையாக இருப்பது போலவே, குடும்பத்தை நிர்வகிப்பதும் சமைப்பதும் மனைவியினுடைய வேலையாகும்!

பெரும்பாலான மனைவியர் தங்கள் புருஷர்கள் செய்யும் காரியங்களில் தாங்களாகவே அக்கறை செலுத்துவதில்லை. இதுதான் வருத்தப்படக் கூடிய விஷயமாகும்.

கணவன்மாரை நல்லவிதமாகத் திருத்துவதற்கு அவர்கள் மீது எவ்வளவு செல்வாக்கைப் பிரயோகிக்க முடியும் என்பதை, மங்கையர் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. தங்களை அறியாமலேயே அந்தச் செல்வாக்கைப் பெண்கள் செலுத்தி வருகிறார்கள் என்பது உண்மைதான் என்றாலும், அது போதாது! தங்களிடம் அத்தகைய செல்வாக்கு இருக்கிறதென்பதைப் பெண்கள் மனதார உணர வேண்டும். அந்த உணர்வானது, பெண்களுக்குப் பலத்தைக் கொடுத்து, தங்கள் வாழ்க்கைத் துணைவர்களை எப்படிக் கையாளவேண்டும் என்பதற்கு வழியையும் காட்டும்.

இளைஞர்களே, மணப் பெண்களை விடச் சிறந்த அறிவும் வளமான உணர்ச்சிகளும் உங்களுக்கு நற்பேறுகளாய் வாய்திருக்குமானால், அவற்றையெல்லாம் உங்கள் மனைவியருக்கு ஊட்டி வளருங்கள். அவர்களுக்கு உண்மையான ஆசிரியர்களாகவும் வழிகாட்டிகளாகவும் விளங்கி, அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; வழிகாட்டுங்கள். ஆனால் ஒருபோதும் அவர்களைத் தவறான வழிகளில் செலுத்தாதீர்கள்!

திருமணம் என்பது ஒரு புனிதமான சடங்குதான்; ஒரு புனர் ஜன்மந்தான்!

உண்மையான திருமணம் என்பது, வெறும் உடல்களின் சேர்க்கையை மட்டும் குறிப்பதல்ல. ஆத்மாக்களின் பிணைப்பையும் குறிப்பதாகும்.

மணவாழ்க்கை என்பது இகத்திலும் பரத்திலும் பரஸ்பர நன்மையை உயர்த்திப் பெருக்குவதற்குத்தான் ஏற்பட்டிருக்கிறது. மனித சமுதாயத்திற்குத் தொண்டு செய்யவும் அது ஏற்பட்டிருக்கிறது.

மணம் என்பது மணமக்களின் எதிர்கால நன்மையைப் பெரிதும் பாதிக்கிற காரியம்.

பரஸ்பரம் மனம் பொருந்திய அன்பும் ஒற்றுமையுமே, திருமணம் நடப்பதற்குரிய சரியான நிபந்தனைகளாகும்.

உற்ற நண்பர்களாகவும், சரிசமமானவர்களாகவும், நீங்கள் திருமணத்தில் பிணைக்கப்படுகிறீர்கள்.

திருமணத்தை விரும்பி ஏற்றவர்கள், ஆத்மிக வளர்ச்சிக்கே முதல் இடம் கொடுக்கவேண்டும்.

திருச்சிற்றம்பலம்

திருமகளெம் பெருமாட்டி மகிழும் வண்ணச்
செழுங்கனியே ! கொழும்பாகே ! தேனே ! தெய்வத்
தருமகனைக் காத்தருளக் கரத்தே வென்றித்
தனுவெடுத்த வொருமுதலே ! தருமப் பேறே !
இருமையுமென் னுளத்தமர்ந்த ராம நாமத்
தென்னரசே ! யென்னமுதே ! யென்ருயே ! நின்
மருமலர்ப்பொன் னடிவழுத்துஞ் சிறியேன் அந்தோ
மனந்தளர்ந்தேன், அறிந்தும் அருள்
வழங்கிலாயே.

குலவுபே ரண்டப் பகுதியோ ரனந்த
கோடிகோ டிகளுமாங் காங்கே
நிலவிய பிண்டப் பகுதிகள் முழுதும்
நிகழ்ந்தபற் பலபொருள் திரளும்
விலகுறு தகத்தும் புறத்துமே லிடத்தும்
மெய்யறி வானந்தம் விளங்க
அலகுறு தொழியா ததுவதில் விளங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே !

—திருவருட்பா

தொண்டிற்கு அடுத்த ஸ்தானத்தையும், குடும்ப விஷயங்கள் சமூக ஈடுபாடுகள் முதலியவற்றிற்கு மூன்ருவது ஸ்தானத்தையும், காதல் அல்லது பரஸ்பர கவர்ச்சி என்பதற்குக் கடைசியான நான்காவது ஸ்தானத்தையும் கொடுக்க வேண்டும்!

திருமணம் என்பது பெற்ரேர்களால் பணத்திற்காகச் செய்யப்படும் ஒரு வியாபார ஏற்பாடு என்ற முறை, அடியோடு நீங்க வேண்டும்!

தம்பதிகள் தங்களுடைய சேர்க்கையை வெறும் கொடுக்கல் வாங்கல் மாதிரி நினைத்தார்களானல், திருமணம் என்பது ஓர் இழிவான வியாபாரமாக இருந்துவிடும்.

சதி விரதம் காக்கும் ஒருபெண் திருமணத்தைக் கேவலம் மிருக இச்சையைத் தீர்த்துக் கொள்ளக் கூடிய சாதனமாகக் கருத மாட்டாள். ஆனல் தன்னிடமுள்ள தனித் தன்மையைக் கணவனுடைய தனித் தன்மையோடு இரண்டற ஒன்று கலந்து, தான் என்பதை மறந்து, தன்னலமற்ற சேவை புரியும் லட்சியத்திற்குரிய சாதனமென்றே கருதுவாள்.

திருமணம் செய்து கொள்வதற்குத் தகுந்த காலம் வரும்போது, அதாவது உங்களுக்கு ஒரு வாழ்க்கைத் துணைவன் இருந்துதான் தீர வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்படும்போது, ஒருவனுடைய அழகிற்கோ, பணத்திற்கோ புகழிற்கோ ஏங்கி அழியாமல், நல்லொழுக்கத்தை உண்டாக்கக் கூடிய ஒப்பற்ற குணங்களெல்லாம் படைத்த ஒருவனையே நீங்கள் கணவனுகத் தேடிக் கொள்ள வேண்டும்.

மிருகத்தனமான இச்சையைத் திருப்தி செய்து கொள்வதற்காகவே திருமணம் என்று யாராவது உங்களுக்கு முன்பு சொல்லியிருந்தால், அந்தப் பாடத்தையெல்லாம் நீங்கள் மறந்து விடுங்கள். அது மூட நம்பிக்கையேயாகும். மணச்சடங்குகள் அனைத்தும் புனிதமான அக்கினியின் முன்னிலையில்தான் நடைபெறுகின்றன. அந்த அக்கினியானது உங்களிடமுள்ள காம வெறியையெல்லாம் சாம்பலாக்கி விடட்டும்!

காம இச்சையைக் கட்டுப்படுத்தி, மேலான நிலையில் உன்னதமான வாழ்க்கை நடத்துவதே திருமணத்தின் அடிப்படை நோக்கமாகும்.

மிருகத்தனமான இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வது ஒன்றுதான் திருமணத்தின் உயர்ந்த நோக்கமும் உபயோகமும் என்று கருதி, அத்தகைய ஆசைப் பூர்த்தியின் இயற்கையான விளைவைப் பற்றிக் கவலையற்றிருந்தால், திருமணமானது தன் புனிதத் தன்மையை இழந்துவிடுகிறது.

குழந்தையை விரும்பாதவன் திருமணமே செய்து கொள்ள வேண்டியதில்லை. வெறும் காம உணர்ச்சியைத் திருப்தி செய்வதற்காகச் செய்து கொள்ளப் படும் திருமணமானது திருமணமே அல்ல. அதுவிபச்சாரமே ஆகும்.

சிசுஹத்தி, கர்ப்பச்சிதைவுகள், பால்ய விவாகம் போன்ற காரியங்கள் மிருக வர்க்கத்திடம் இல்லை. திருமணத்தை ஓர் புனிதமான சடங்காகக் கருதும் மனிதச் சமுதாயத்தில்தான் அவை சாபக்கேடாய் விளங்குகின்றன.

மதத்தின் அஸ்திவாரம் கட்டுப்பாடேயாகும். திருமணம் என்பது ஒரு கட்டுப்பாடே தவிர

வேறல்ல. கட்டுப்பாடு என்பதையே உணராத மனிதனுக்குத் தன்னை உணர்தல் என்ற வாய்ப்பே இல்லாதுபோய்விடும்.

திருமணம் செய்து கொள்ளக் கூடிய வயது எதுவென்று தீர்மானிப்பதானால், இருபதுவயதையே நான் குறைந்த அளவு என்று தீர்மானிப்பேன்.

பெண் — மனித ஜாதியின் சிறப்பான பாதி.

பெண்களை நான் பொறுமையின் வடிவங்களாகப் போற்றுகிறேன்.

தியாகம், துயரம் — இவற்றின் உருவமாகத்தான் பெண் இருந்து வருகிறாள்!

பெண்களை அகிம்சையின் வடிவம் என்றே எழுதி வந்திருக்கிறேன். அகிம்சைஎன்றால் அளவு கடந்த அன்பு என்று அர்த்தம். அளவு கடந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளும் தன்மையைத்தான், அளவு கடந்த அன்பெனலாம். மனிதனுக்குத் தாயாக விளங்கும் பெண்ணைத் தவிர வேறு யாரிடம் அதிகமான துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளும் சக்தியினைக் காண முடியும்?

அடிப்பதில் பெண் பலஹீனமானவள் என்றால், சகிப்புத்தன்மையில் அவள் அதிக வலுவுடையவள்.

பெண் தன்னைப் பலஹீனமான படைப்பு என்றும், மனிதன் வைத்து விளையாடுவதற்கு ஒரு பொம்மையாகப் பயன்படவே தான் தகுதி உள்ளவள் என்றும், எண்ணுகிற எண்ணத்தை விட்டுவிடுவாளேயானால், இந்த உலகத்தைத் தானும் தன் துணைவனும் நன்கு வாழ்வதற்குரிய இடமாக ஆக்கிவிடும் ஆற்றலைப் பெற்றுவிடுவாள். அப்படி அவள் செய்வாளேயானால், ஆடவர்களை நல்ல தந்தையாகவோ, நல்ல மகனாகவோ, நல்ல கணவனாகவோ அவளால் ஆக்கிவிட முடியும்!

பெண்களைப் பலஹீனமான வர்க்கம் என்றுசொல்வது பெரும் பழியாகும். அது பெண்ணிற்கு ஆடவன் இழைக்கும் அநீதியாகும்.

அகிம்சையின் சக்தியைப் பெண்கள் உணர்ந்து விடுவார்களேயானால், பலஹீனமான பெண் வர்க்கம் என்று அழைக்கப்படுவதை ஒருபோதும் பெண்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

துரதிருஷ்டவசமாகப் பெண்ணாகப்பட்டவள் தன்னிடம் ஆணுக்கு மேலாகச் செலுத்தக் கூடிய அபாரமான சக்தி இருக்கிறதென்பதை உணராமல் இருக்கிறாள்.

ஆடவனது வெறும் காமக்கிழத்தியாய் இதுவரை இருந்து வந்ததையும், இனிமேல் இருக்கக்கூடுமென்பதையும், பெண்கள் மறந்துவிடட்டும். மனிதனுக்குத் தாயாகவும், சிருஷ்டிகர்த்தாவாகவும், மௌனமான தலைவியாகவும் இருந்துகொண்டு, ஆடவனுக்கு உதவி செய்யும் பெண் உன்னத அந்தஸ்தை அடைந்துவிடுவாள்.

தற்காலப் பெண் சூரத்தனத்தை விரும்புகிறாள்.

இதயத்தைத் தொடும் வண்ணம் வேண்டிக் கொள்ளும் திறமை, பெண்ணைவிட வேறு யாருக்கு அதிகமாய் இருக்க முடியும்?

கல்வியறிவு ஆண்களுக்கு எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு தூரம் பெண்களுக்கும்

இன்றியமையாததாகும். ஆனால் ஆண்களுக்கும், பெண்களுக்கும் கல்வி போதிக்கும் முறையும் ஒரே மாதிரி சமமாகத்தான் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை!

குடும்ப வாழ்க்கை என்பது பெண்களுக்கே உரிய வட்டகையாகும். குடும்ப நிர்வாகம், குழந்தை வளர்ப்பு, குழந்தைகளின் படிப்பு முதலான விஷயங்களைப் பெண்களுக்கு அதிகமாகப் போதிக்க வேண்டும்.

சத்தியாக்கிரக இயக்கத்தைக் கண்டு பிடித்ததன் மூலம், பெண்கள் இயக்கத்தையும் உதயமாக்கி விட்டதாக நான் பெருமை பாராட்டிக் கொண்டதுண்டு!

பெண் இனத்தின்மீது எனக்குள்ள மதிப்பு மிகப் பெரியதாகும்!

இளைஞர்களே! பெண் குலத்தினை மரியாதை செய்யவேண்டுமென்கிற மனோவுணர்ச்சி உங்களிடம் இருத்தல் வேண்டும்.

தியாகம், அமைதி, சகிப்புத் தன்மை, பணிவு, நம்பிக்கை, அறிவு, ஆகியவற்றின் உருவப் பாடாகவே பெண் குலம் இருந்து வருகிறது.

ஆலயமும் மூர்த்திகளும்

கோபுரம் ஸ்தூல லிங்கத்தை உணர்த்துகின்றது. உலகம் எங்கும் வியாபித்திருக்கின்ற விராட் புருஷனது பாதம் முதல் சிரசு வரையுள்ள பாகங்களையும், அவனது இதயத்தில் இறைவன் விளங்கும் தன்மையையும், கோயில்கள் நன்முக விளக்குவன. கோபுர தரிசனம் கடவுளது பாத தரிசனமாகும். இதனை பிரம்ம ரந்திர மத்ய கபால த்வாரம் என்று யோகிகள் கூறுகின்றனர்.

கொடிமரம், உயிர்கள் தங்குகின்ற சிறையிலிருந்து அவர்களை மீட்பதற்குரிய போரின் வெற்றிச் சின்னமாக விளங்குவது. அதனை அடுத்துள்ளது பலிபீடம். ஆணவமலம் இங்கு அறுபட்ட நிலையைக் காட்டும். அதற்கடுத்துள்ள ரிஷபம், ஆணவக்கட்டிலிருந்து விடுபட்ட ஆத்மாவைக் குறிக்கும். அந்த ரிஷபம் இறைவனை நோக்கியிருக்கும். அதன் கருத்தாவது: இறைவனை அணுக வருவதற்குமுன் உலக முகமாகத் திரும்பியிருந்த ஆத்மாவானது, ஆணவமலத்தினின்று விடுபடுகின்ற போது இறைவன் முகமாக இருப்பதைக் காட்டும்.

விக்கிரகம் என்பது கடவுளின் திருஉருவமேயாம். ஆலயங்களில் காணும் அருள்திரு மேனிகளில் முக்கியமானது சிவலிங்கமாகும். சிவபெருமான் எங்கும் வியாபகமாய் நிற்பினும், சிவலிங்கத்தின் பால் தயிரில் நெய்போல விளங்கி நிற்பர்.

சிவம் + லிங்கம் = சிவலிங்கம். சிவம்–கடவுள். லிங்கம்–அடையாளம். கடவுளைக் காட்டும் குறி அல்லது அடையாளம் என்பது பொருள்.

இந்த அருள்திரு மேனியின் அடிப்பாகத்தில், உடுக்கை போன்ற பீடம் ஒன்று காணப்படும். இதற்கு ஆவுடையென்று பெயர். இதன்மேல் உருண்டு நீண்ட முனையற்ற தண்டொன்று காணப்படும். இதற்குப் பாணம் அல்லது இலிங்கம் என்று பெயர். இவற்றுடன், ஆவுடையின் மேல் பாகத்தில் ஒரு பக்கமாகக் கோமுகம் ஒன்றுங் காணப்படும்.

சிவலிங்க உருவம் எதை உணர்த்துகின்றது எனின், சிவலிங்கம் ஒரு ரூபமாக அமைந்திருந்தாலும், அது மற்ற திருமேனிகளைப் போன்று மனித ரூபத்தோடுஅமைந்திருக்கவில்லை. அரூபியாகிய இறைவன், மற்றைய ரூபங்களெல்லாம் தோன்றுவதற்கும், இறுதியில் எல்லாம் தன்னுள் லயமாவதற்குமாக ஒரு திருவுருவத்தைக் கொள்ள வேண்

டியவனுகிறுன். அவ்வாறு அவன் கொண்ட ரூபாரூபமாகிய சதா சிவமே சிவலிங்கமாம்.

சிவலிங்கத்தின் முன்பாகக் காணப்படும் நந்தி அல்லது காளே மாடு உணர்த்துவதாவது: மாடு என்பது சாஸ்திரங்களில் தரும தேவதை எடுக்கும் ரூபம். ஆத லால், மாடு தர்மத்தை உணர்த் தும். நந்தி என்பதற்கு ஆனந்திப் பது என்றும் பொருள் உண்டு. அதன் வெண்மை நிறம் சாத்வி கத்தையும், அதன் கால்கள் பரம்பொருளாகிய இலிங்கத்தினி டம் கொண்டு சேர்க்கும் சற் குணங்களாகிய சமம், விசாரம், சந்தோஷம், சாது சங்கம் ஆகிய நான்கு ஆத்ம குணங்களேயும் உணர்த்தும்.

''விநாயகர்'' என்ற பதத்தின் பொருள், தமக்குமேல் நாயகர் அற்றவர், ஒப்புயர்வற்றவர் என் பதாம்.

விநாயகர் திருவுருவத்தின் அமைப்பு: யானே முகம், ஒடிந்த கொம்பு, பருத்த தொந்தி, இடது கையில் மோதகம், மூஷிக வாகனம் இவற்றுடன் இருக்கும் கோலத்தோடு விளங்குவதாகும். இவர் பரமசிவன்றன் மூத்த குமாரர் என்பது: எல்லாம்வல்ல பரம்பொருளாகிய கடவுளிட மிருந்து, முதலாவது உண்டாகிய படைப்பு 'ஓம்' எனும் பிரணவ நாதமேயாகும். அந்த ஓம் எனும் ஒலியின் வரிவடிவமே விநாயக ரின் திருவுருவமாம்.

இறைவனிடமிருந்து முதற் கண் தோன்றியது ஓங்காரப் பிரணவமே ஆகையால், இவர் ''பிரணவ கணபதி'' என்றும், ''ஓங்கார ரூபன்'' என்றும், பரமசிவனது மூத்த பிள்ளேயென் றும் அழைக்கப்படுகிறுர். இன் னும், ஓங்காரத்திற்கு இடப்புறம் மட்டும் ஒரு கோடு. உண்டு. வலப்புறம் கோடு இல்லே. விநாய கப் பெருமானுக்கு இடப்புறம் மட்டும் கொம்பு உண்டு. வலப் புறம் இல்லே. ஆகவே, விநாயகப் பெருமான் பிரணவ ரூபி என்பது விளங்கும்.

விநாயகப் பெருமானது திரு மேனி அமைப்புக்கு, வேறு வகை யாகத் தத்துவம் கூறுவதும் உண்டு. யானேகளில் ஆண் யானேக்குக் கொம்பு உண்டு. பெண் யானேக்குக் கொம்பு இல்லே. விநாயகப் பெருமானது திருமுகத்தில் ஒரு பாற் கொம்பு இருத்தலின் ஆண் என்போமா யின், ஒரு பாற் கொம்பு இல்லே. ஒரு பாற் கொம்பு இல்லாதிருத் தலின் பெண் என்போமாயின், ஒருபாற் கொம்பு இருக்கிறது. ஆகவே, அவரை ஆண் என்றும் சொல்ல முடியாது, பெண் என் றும் சொல்ல முடியாது.

அன்றியும், தலே யானேத்தலேயா யிருத்தலின் அஃறிணேயாம். உடம்பு பூத சரீரமாக இருத்த லின் உயர் உயர்திணேயாம். ஆகவே, அப்பெருமானே உயர் திணேயென்றும் சொல்ல முடி யாது. அஃறிணேயென்றும் சொல்ல முடியாது. இவற்றுல், கடவுள் திணே, பால் என்னும் பிரிவுகளுக்கு அப்பாற்பட்ட வனென்னும் தத்துவம் விளங்கு வதை நாம் அறிகிறேம்.

மேலும், உலகத்தில் யானே யைக் கட்டும் கயிறும், யானேயை அடக்கும் அங்குசமும், பாகனி டத்திலே யிருக்கும். ஆனுல் இங்கே பாசமும், அங்குசமும் யானேமுகப் பெருமானிடம் இருக் கின்றன. இதனுல், ஏனே யானே களே பாசத்தாற் கட்டி அங்கு சத்தால் அடக்கப்படும். விநாய கப் பெருமானுகிய யானேயைப்

பாசத்தால்கட்டுவதும் இயலாது, அங்குசத்தால் அடக்குவதுமியலா'து என்னும் தத்துவம் விளங்குகின்றது:

விநாயகர் சந்நிதியில் எப்படி வணங்குதல் வேண்டுமென்பது: வலக்கையை இடக்கையின் முன் வைத்து, வலக்கையால் இடப் புறத்திலும், இடக்கையால் வலப் புறத்திலும், மண்டையில் மூன்று முறை குட்டுக்களிட்டு, வலக்கையால் இடக்காதையும், இடக் கையால் வலக்காதையும் பிடித்துக்கொண்டு, மூன்று முறை தோப்புக்கரணமிட்டு, விநாயகர் தோத்திரம் கூறி வணங்குதல் வேண்டும்.

ஏன் இவரை இவ்வாறு வணங்குதல் வேண்டும் என்பது:

ஒரு குற்றவாளி தான் செய்த குற்றத்திற்குத் தண்டனை தானே விதித்துத் தானே அனுபவித்தல் போல;

கடவுளின் சமீபத்தில் செல்லுவதற்குத் தகுதியில்லாதபடி குற்றங்கள் நிறைந்த மக்கள், தாம் செய்த குற்றத்திற்குத் தாமே தண்டனைகள் செய்து அனுபவிக்க மேற்கூறியவாறு செய்து, ''இனிமேல் அவ்விதக்குற்றங்கள் செய்ய மாட்டோம்'' என உறுதி செய்து கொள்ளுகிறார்கள். எந்தக் காரியங்களைத் தொடங்கும் போதும் விக்கினங்கள் ஏற்படுமானால், விக்கினங்களை நீக்கியருள வேண்டுமெனவும் விநாயகரை வணங்குகிறார்கள்.

புத்தர் பொன்மொழிகள்



பிறரைக்கஷ்டப்படுத்தித்தான் சுகமடைய விரும்புகிறவன், துவேஷ விலங்குகளில் சிக்குண்டு அவற்றிலிருந்து விடுதலை பெற முடியாதவனாகி விடுகிறான்!

சுகமாய் வாழ விரும்பும் ஜீவன்களை எவனாவது தன் சுகத்தை நாடித் தண்டித்து வதைப்பானேயாகில், சாவிற்குப் பிறகு அவன் நலம் பெறுவதில்லை!

எவனும் பிறரைத் தூய்மையாக்குவதில்லை! சுத்தமும் அசுத்தமும் அவனவன் செயலே!

சுயநலத்தினால்தான் ஜனங்கள் துக்கப்படுகிறார்கள்.

இலையுதிர்காலத்திய தாமரைப் பூவைப் பறிப்பதுபோல, உன்னுடைய சுயநலப் பற்றுதலை உன் கையாலேயே அறுத்தெறிந்து விடு. சாந்தி வழியைப் போற்றி நடப்பாயாக.

தீமை தரும் தீச்செயல்கள் புரிவது மிகவும் சுலபம்; நன்மை தரும் நற் செயல்கள் புரிவது தான் மிகவும் கஷ்டம்!

ஆசை, துவேஷம், பிரமை, அச்சம் — இந்நான்கின் மூலமாகத் தவறான வழியில் சென்று மனிதன் தீச்செயல்கள் புரிகிறான்.

முட்டாள், தன் தவறை அறியாமலே தீய காரியங்களைச் செய்கிறான். நெருப்பைப் போன்ற சொந்தச் செயல்களாலேயே வெந்தொழிகிறான்.

தீய காரியத்தைச் செய்யாமல் விடுவதே நல்லது; ஏனெனில், அதற்காகப் பின்னால் ஒருவன் வருந்த நேரிடும்! நல்ல காரியத்தைச் செய்வதே நல்லது. ஏனெனில் அதற்காகப் பின்னால் அவன் வருந்துவதில்லை.

தீச்செயல் புரிபவன் இந்த உலகில் புலம்புகிறான்; மறுமையிலும் புலம்புகிறான். இம்மை மறுமை எனும் இரண்டிலுமே அவனுக்குத் துயரமே. அவன் தன் சொந்தச் செயலின் தீய விளைவைக் காணும்போது புலம்பித் துன்புறுகிறான்.

நற்காரியம் செய்வதில் தாமதித்தால், மனமானது தீய வழியில் திளைக்கத் தொடங்கிவிடும்.

ஒரே புஷ்பக் குவியலிலிருந்து பலவிதமான மாலைகளையும் தொடுத்துவிட முடியும். அதைப் போலவே, அநித்தியமான மனிதன் தன்னுடைய ஒரே பிறவியிலேயே எத்தனையோ விதமான நற்காரியங்களை யெல்லாம் சாதித்துவிட முடியும்.

கள் அருந்துவது; அகாலவேளைகளில் தெருக்களில் அலைவது; அடிக்கடி திருவிழாப் பண்டிகைகளில் ஈடுபடுவது; சூதாட்டம் பழகுவது; தீயவர்களோடு

தோழமை கொள்வது; சோம்பேறித்தனத்தில் மூழ்குவது — இவை ஆறும் செல்வத்தை விழுங்கும் ஆறு வாசல்கள்.

எங்களுடையது என்று சொல்லிக்கொள்ள எதுவுமில்லாத நாம் ஆனந்தமாக வாழ்கிறோம்.

'என் குழந்தைகள், என் பணம்' என்ற எண்ணத்தினால் முட்டாள் துக்கப்படுகிறான். அவனே அவனுக்குச் சொந்தமில்லை! குழந்தைகளும் பணமும் அவனுக்கு எப்படிச் சொந்தமாகும்?

சோம்பேறி, 'இப்போது அதிகக் குளிர்!' என்பான்; ஒரு வேலையும் செய்யமாட்டான்! 'இப்போது அதிக உஷ்ணம்!' என்பான்; ஒரு வேலையும் செய்யமாட்டான். 'இப்போது அதிகாலை!' என்பான்; ஒரு வேலையும் செய்ய மாட்டான். 'இப்போது அகாலம்!' என்பான்; ஒரு வேலையும் செய்யமாட்டான். 'இப்போது எனக்கு அதிகப் பசி!' என்பான்; ஒரு வேலையும் செய்ய மாட்டான்! 'இப்போது என் வயிறு கனத்துவிட்டது!' என்பான். ஒரு வேலையும் செய்ய மாட்டான். இவ்வாறு வாழ்நாளெல்லாம் சோம்பேறி வேலை செய்யாமலிருக்கச் சாக்குப் போக்கு தேடிக்கொண்டேயிருப்பான்!

எவன் விழித்தெழ வேண்டிய நேரத்தில் விழித்துக் கொள்ளாமல் இருக்கிறானோ, எவன் இளமையும் பலமும் வாய்ந்தவனாக இருந்தும் சோம்பிக் கிடக்கிறானோ, எவனுடைய கருத்தும் சிந்தனையும் பலஹீனமாக இருக்கிறதோ, அந்த மந்த புத்திக்காரனான சோம்பேறி ஒருபோதும் அறிவு மார்க்கத்தைக் கண்டறிய முடியாது.

மற்றவர்களின் குறைபாடுகளையும், தவறுகளையும், பாவங்களையும் கவனித்துப் பார்க்க வேண்டியதில்லை; ஞானியானவன் தன்னுடைய சொந்தத் தவறுகளையும் கெட்ட செயல்களையும் கவனித்துப் பார்க்கவேண்டும்.

ஆசைகளின் பிரகாரம் அனுபவித்துத் திரிவது அற்பம் என்பதையும், அதன் பின் விளைவு துயரம் என்பதையும் அறிந்தவனே ஞானி.

ஞானமில்லாதவனுக்கு தியானமில்லை; தியானமில்லாதவனுக்கு ஞானமில்லை.

புஷ்பத்தில் தேன் சேகரிக்கும் வண்டு, புஷ்பத்திற்குச் சேதமில்லாமலும், அதன் வர்ணத்துக்கோ வாசனைக்கோ பங்கமில்லாமலும், தேனை மட்டும் பெற்றுச் செல்கிறது. அதுபோல் ஞானி ஒருவன் தன் கிராமத்தில் வாழ்வானாக!

ஜீவ வதை செய்பவன், பொய் புளுகுபவன், பிறர் பொருளைக் கவருபவன், பிறர் மனைவியை இச்சிப்பவன், போதையேற்றும் மதுபானங்களை அருந்துபவன் — இவர்கள் இந்த உலகில் தங்களுடைய மூலவேர்களைத் தாங்களே கல்லி யெறிகிறார்கள்.

உடம்பு உண்மையானதென்ற எண்ணம்; சந்தேகம்; பயன் கருதிச் செய்யும் விரதங்கள்; புலனிச்சைகளான காமம்; கோபம்: இவ்வைந்தும் ஐந்து தளைகளாகும்.

கர்வம்; தற்புகழ்ச்சி; அறியாமை இவைகளைப் போக்குவது தான் விசுத்தி மார்க்கம்.

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை, 4 தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர், சென்னை-17.

சிரியர் : கலைச்செல்வி மணிமேகலை

அருள்

அருட்பெருஞ்சோதி



தனிப்பெருங்கருணை

அருள்

தமிழ்மாதம் முதல்நாள் தோறும் வெளிவருகிறது

அன்பார்ந்த வாசகர்களுக்கு

வாழ்க்கையில் உங்களுக்கு அவ்வப்போது ஏற்படக் கூடிய சிககல்களையும் பிரச்னைகளையும், சுருக்கமாக — ஆனால் தெளிவாக, எழுதியனுப்புங்கள். அவற்றிலிருந்து நீங்கள் விடுபடுவதற்கு உரிய ஆத்மிக — தார்மிக — சமய ரீதியான ஆலோசனைகளை, ''அருள்'' பத்திரிகையில் வெளியிடுகிறோம்.

உங்கள் ஊரையோ பேரையோ நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை. கையெழுத்துக் கூடப் போடாமல், வெறும் விஷயத்தை மட்டும் ஒரு கடிதத்தில் எழுதியனுப்பினால் போதும். உங்கள் ஊரையும் பேரையும் நீங்கள் குறிப்பிட்டு எழுதினால் கூட, அவற்றை நாங்கள் வெளியிடமாட்டோம்.

— ஆசிரியர்

அருள் 3	ஆண்டுச்	செப்டம்பர்
கருணை 12	சந்தா	15-9-69
புரட்டாசி, சௌமிய	ரூ. 3-60	விலை : 30காசு.

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி : நிர்வாகி, ''அருள்,'' 4, தணிகாசலம் செட்டிதெரு, தியாகராயநகர், சென்னை-17.

ஆத்ம வித்யா பூஷணம்
ஜகதீச சாஸ்திரிகள்

வேலவன்

பிரபல வங்க நாவலாசிரியராகிய சரத் சந்திரரிடம் போய், ''உங்களுடைய நாவல்கள் ரவீந்திரநாத் தாகூருடைய நாவல்களைக் காட்டிலும் சுவையாக இருக்கின்றன'' என்று சொன்னார்களாம் சில ரசிகர்கள்.

சரத் சந்திரர் சற்று மௌனமாய் இருந்துவிட்டு, ''உண்மைதான். நான் உங்களைப் போன்ற ரசிகர்களுக்காக எழுதுகிறேன். ரவீந்திரர் என்னைப் போன்ற நாவலாசிரியர்களுக்காக எழுதுகிறார்!'' என்று பதில் அளித்தாராம்.

நாவலாசிரியர்களில் மட்டுமல்ல; ஒவ்வொரு துறையிலுமே இப்படி இரு வகையினர் இருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக, உலகில் உள்ள பல விஞ்ஞானிகள் முதல் வகையைச் சேர்ந்தவர்கள். ஐன்ஸ்டீன் போன்ற சில விஞ்ஞானிகள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள். அதாவது, அவர்கள் சாதாரண விஞ்ஞானிகள் அல்ல. விஞ்ஞானிகளுக்கும் விஞ்ஞானிகளாய் விளங்குபவர்கள்.

அதே போல், வேத சாஸ்திரங்களைக் கற்று அறிந்த பண்டிதர்களிலும் இருவகையினர் உண்டு. தம்முடைய எழுத்துக்களாலும் உபந்யாசங்களாலும், சாஸ்திரங்களின் சாரமான விஷயங்களை மக்களுக்கு விளக்கிக் கூறுபவர்கள், முதல் வகையைச் சேர்ந்தவர்கள், அந்தப் பண்டிதர்களுக்கும் பண்டிதர்களாய் விளங்குபவர்கள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள். அந்த வகைய இரண்டாவது வகையைச் சேர்ந்த ஒரு ஷட்சாஸ்திர மகா பண்டிதரின் திருவுருவப் படத்தைத் தாங்கி நிற்கும் பேறு, இம்மாத ''அருள்'' இதழுக்குக் கிடைத்திருக்கிறது. அவர்தான் ஆத்ம வித்யா பூஷணம், சாஸ்திர ரத்னாகரம், வித்யாலங்கார பிரம்ம ஸ்ரீ. வி. ஜகதீச சாஸ்திரிகள்.

கும்பகோணத்துக்குத் தெற்கேயுள்ள இஞ்சிக் கொல்லை என்னும் ஊரில், 1895 டிசம்பர் 15-ந் தேதியன்று, பிரம்மஸ்ரீ யஜ்ஞவேங்கடராம தீக்ஷிதர் — அபயாம்பாள் என்னும் பெற்றோர்களுக்கு மூன்றாவது புதல்வராகப் பிறந்தவர்

ஸ்ரீ ஜகதீச சாஸ்திரிகள். இளமையில் தம் தந்தையிடமே சுக்ல யஜுர் வேதத்தை முறைப்படி அத்யயனம் செய்து, ரகுவம்சம் முதலிய காவ்யங்களையும் அவர் கற்று அறிந்தார். பின்னர், கருங்குளம் மஹாமஹோபாத்யாய கிருஷ்ண சாஸ்திரிகள், அவருடைய குருவாகிய சிதம்பரம் மஹா மஹோபாத்யாய ஹரிஹர சாஸ்திரிகள், வரகூர் பாஷ்ய பாவஜ்ஞ வேங்கடராம சாஸ்திரிகள், கும்பகோணம் மஹா மஹோபாத்யாய யஜ்ஞ ஸ்வாமி சாஸ்திரிகள் போன்ற மஹா பண்டிதர்களிடம், தர்க்கம், வியாகரணம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களைக் கற்று முடித்தார். அதன் பிறகு, காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான வித்வானாகப் பதவி ஏற்றார்.

சாஸ்திரிகளின் மூத்த சகோதரராகிய ஸ்ரீ யஜ்ஞராம தீக்ஷிதர் ஒரு யோகீஸ்வரர். அவருக்குத் தமிழிலும் சிறந்த பாண்டித்யம் உண்டு. திருவாசகம், இறையனார் அகப் பொருள் போன்ற தமிழ் நூல்களை, அவர் தம் தம்பிக்குப் பாடம் சொல்லி வைத்தார். தாம் இரமணாச்ரமத்துக்குப் போகும் போதெல்லாம், அவர் தம் தம்பியையும் உடனழைத்துச் செல்வதுஉண்டு. அதன் மூலம், சாஸ்திரிகளுக்கு பகவான் ஸ்ரீ இரமண மஹரிஷியுடன் மிக நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது. அங்கிருந்த காவ்ய கண்ட கணபதி சாஸ்திரிகள் போன்ற பெரியோர்களுடனும் பழக்கம் ஏற்பட்டது. அதனால், காஞ்சிபுரத்தில் ஆஸ்தான வித்வானாய் இருந்து கொண்டே, அவர் அடிக்கடி திருவண்ணாமலையிலும் போய்த் தங்கி வரலானார்.

சென்னை மீனம்பாக்கத்தை அடுத்த பழவந் தாங்கல் என்னும் கிராமத்தில், ஸ்ரீ சிதானந்த நாதர் என்றொரு மகான் இருந்தார். இவர்தான் குஹானந்த மண்டலி என்னும் புகழ் பெற்ற ஸ்ரீ வித்யா மண்டலியை நிறுவியவர். இவர் எழுதிய "குருதத்வ விமர்சம்" என்னும் நூலை, நமது ஜகதீச சாஸ்திரிகள் பார்க்க நேர்ந்தது.

சாஸ்திரிகள் அப்போது காமகோடி மடத்திலிருந்து வெளியிடப்பட்டு வந்த "ஆர்ய தர்மம்" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார். ஸ்ரீ சிதானந்தரது "குருதத்வ விமர்சம்" அவருடைய இதயத்தைக் கவர்ந்தது. எனவே, "ஆர்ய தர்மம்" பத்திரிகையில், அந்நூலைப் பற்றி ஓர் அருமையான மதிப்புரை எழுதினார்.

சிறிது காலத்திற்கெல்லாம், ஸ்ரீ சிதானந்தரையே அவர் நேரில் சந்திக்கும்படியான வாய்ப்புக் கிட்டியது. நாளடைவில் இருவர் உள்ளமும் ஒருவர்பால் மற்றவரை ஈர்க்கத் தொடங்கின. அதன் விளைவு, 1948'ல், காஞ்சி ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு, ஸ்ரீ சிதானந்தரின் விருப்பப்படியே சென்னைக்கு வந்து விட்டார் ஸ்ரீ ஜகதீச சாஸ்திரிகள். வந்தது மட்டும் அல்ல; அவரையே தம் ஸ்ரீ வித்யா குருவாகவும் வரித்துக் கொண்டுவிட்டார். ஸ்ரீ குஹானந்த மண்டலியின் ஆஸ்தான வித்வானாகவும் அமர்ந்து விட்டார்.

ஸ்ரீ குஹானந்த மண்டலியில், உபநிஷத் பாஷ்யங்கள், ஸ்ரீதேவீ

முகாத்ம்யம், தேவீ பாகவதம், ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம், சூத ஸம்ஹிதை, வாமகேச்வர தந்த்ரம், வரி வஸ்யா ரஹஸ்யம் போன்ற பல அபூர்வ கிரந்தங்களை அவர் வகுப்பு நடத்தியிருக்கிறார். இராமாயணம், விராட பர்வம் போன்ற இதிகாச உபந்யாசங்களும் செய்திருக்கிறார். தகுதி வாய்ந்த சிஷ்யர்களுக்கு, முக்தாவளீ, தினகரீ, பஞ்ச லக்ஷணீ போன்ற கிரந்தங்களையும், ப்ரஸ்தாநத்ரய பாஷ்யங்களையும் பாடம் சொல்லி வருகிறார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் நியாய வேதாந்த போர்டின் தலைவராக இருந்திருக்கிறார். காம கோடி ஆஸ்தானத்தில் அத்வைத சபை, வேதபாஷ்ய சபை இவைகளின் பரீக்ஷாதிகாரியாகவும் இருந்திருக்கிறார். தற்போது, மயிலாப்பூரில் உள்ள பாரதிய வித்யா பவனில், உபநிஷத் பாஷ்யங்களும் கீதா பாஷ்யமும் பாடம் சொல்லி வருகிறார். மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருதக் கல்லூரியில், வேதபாஷ்யம் வகுப்பு நடத்தி வருகிறார்.

ஸ்ரீ ஜகதீச சாஸ்திரிகள், வடமொழியில் பல அபூர்வமான நூல்களை எழுதியுள்ளார்கள். (இன்னும் எழுதிக் கொண்டு இருக்கிறார்கள்.) அவற்றுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது, ''சிதசிதசரீரகப்ரஹ்ம ஸித்தி'' என்னும் கிரந்தம் ஆகும். பகவான் ஸ்ரீ இரமண மஹரிஷிகளின் தமிழ் நூல்களையெல்லாம், ஸம்ஸ்க்ருதத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். ''அருணாசல பஞ்சரத்ந வியாக்யாநம்,'' ''உபதேசஸார வியாக்யாநம்''–இவையெல்லாம் இந்த வகையைச் சேர்ந்தவை. ''குஹாஷ்டகம்'', ''ந்ருஸிம்ஹாஷ்டகம்,'' ''துர்காவிம்சதி'' போன்ற வேறு பல நூல்களையும் இயற்றியுள்ளார்கள்.

மேலும் ''ஹரிமீடேஸ்தோத்ரம்'', ''ஷட்பதி ஸ்தோத்ரம்,'' சிவமஹிமகலிகாஸ்துதி,'' ''ஸர்வஸித்திகரஸ்தோத்ரம்,'' ''தக்ஷிணாமூர்த்தி வர்ணமாலா ஸ்தோத்ரம்'' போன்ற பல ஸம்ஸ்கிருத நூல்களுக்கு, தமிழில் உரை எழுதியிருக்கிறார்கள்.

1935'ல், காசியம்பதியிலே, ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளால், ஸ்ரீ ஜகதீச சாஸ்திரிகளுக்கு ''ஆத்ம வித்யா பூஷணம்'' என்னும் விருது வழங்கப் பட்டது. பின்னர் அதே ஆச்சார்யேந்திரர் ''சாஸ்திர ரத்நாகரம்'' என்ற விருதையும் வழங்கினார்.

அயோத்யாவிலிருந்து வெளி வருகிற ''ஸம்ஸ்க்ருதம்'' என்னும் பத்திரிகையின் ஆசிரியராகிய ஸ்ரீ காளீசரண திரிபாடி என்னும் பெரியவர், ''வித்யாலங்கார'' என்னும் பட்டத்தை நமது சாஸ்திரிகளுக்கு வழங்கியுள்ளார்.

''இன்றைய பாரத சமுதாயம் சுபிக்ஷமாக வாழ்வதற்கு, நீங்கள் வழங்கக்கூடிய அறிவுரையாது?'' என்று நான் ஸ்ரீ சாஸ்திரிகளைக் கேட்டேன்.

''ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு, தத்தமக்கு உரிய கர்மாக்களை சிரத்தையோடு செய்து வரவேண்டும். கர்மாக்களில் தவறு நேர்ந்தால், அதற்குப் பிராயச் சித்தம் சொல்லப் பட்டு இருக்கிறது. ஆனால் அந்தப் பிராயச்சித்தத்திலும் தவறு நேர்ந்தால், என்ன செய்வது என்னும் கேள்வி எழுகிறது.

''பிராயச்சித்தத்துக்கும் பிராயச் சித்தம் ஸ்ரீ பரதேவதையினுடைய பாதஸ்மரணம்தான் என்று எடுத்துக்காட்டியிருக்கிறார் பாஸ்கரராயர். ஆகையால், பரதேவதையான ஸ்ரீ அம்பிகையையோ, அல்லது சிவன், விஷ்ணு, கணபதி, சுப்ரமண்யம் போன்ற அவரவர்களுக்கு இஷ்டமான ஏதேனும் ஒரு தேவதையையோ, ஒவ்வொருவரும் பக்தியோடு வழிபட்டு, தியானம் ஜபம் முதலியவற்றைச் செய்யவேண்டும்.

''அதுவும் முடியாதவர்கள் நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபடவேண்டும்.

''அதே சமயத்தில், ஒவ்வொருவரும் தம்மிடம் உள்ள துர்குணங்களை விட்டொழிக்கப் பழகவேண்டும்.

''சமுதாயம் சுபிக்ஷமாக வாழ்வதற்கு, இதுவே வழி!'' என்றார் சாஸ்திரிகள்.

ஸ்ரீ சாஸ்திரிகளுக்கு இப்போது எழுபத்து நான்கு வயதாகிறது. அவர் இன்னும் பன்னெடுங்காலம் நம்மிடையே வாழ்ந்து, தமது அறிவொளியைப் பரப்பிக்கொண்டிருக்குமாறு, நாம் ஆண்டவனை வேண்டுவோமாக!

அதே சமயத்தில், அவரைப் போன்ற மஹநீயர்களின் அறிவுரைகளைக் கடைப் பிடித்து வாழக்கூடிய பரிபக்குவத்தையும், ஆண்டவன் நமக்கு அருள்வானாக!

ஸ்ரீ சற்குரு சதாசிவ பிரம்மேந்திராள் துணை.

நெரூர் தவத்திரு

சுவாமி சதாசிவானந்தா அவர்களுக்கு

16—3—69 உ அன்று நடந்த

60-ம் ஆண்டு நிறைவு விழாவின்போது

வாசித்தளித்த

வாழ்த்து இதழ்

———

அன்புசால் நெறியும் அருள்நெறி மாட்சியும்
இன்பமர் வாழ்வு என்றும் நிலைபெற
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன்
என்னும் சொல்லே மெய்த்தது போல
உலக வாழ்வை உதிர்த்தெறிந் தருளொடும்
அன்பும் பண்பும் ஆதரவு கருணையொடு
இரக்கம் தானம் ஈதலும் இசையும்
என்னும் நற்குணங்கள் இயல்பில் அமைந்த
உருவமே அடிகளின் உருவமாப் பெற்று
வந்திவர் தோன்றினர் வாழ்வினை விளக்கிட
சதா சிவமிவர் சற்றும் மாறில்லை
சிவனைத் தவிர சிரியது பிறிதிலை
என்றிவர் அருளும் இதோப தேசம்
குடும்ப வேலைகள் குறைவின்றிச் செய்தும்
கடமையை ஆற்றி கர்வமொன் றின்றி
இன்பம் வருங்கால் ஏற்றங் கொள்ளாமலும்
துன்பம் நேர்கையில் துவண்டு போகாமலும்

இரண்டையும்	ஒன்றென	இயல்பினில்	கொண்டு
ஈசனை	நினைந்து	இன்னருள்	பெற்று
வாழ்வாங்கு	வாழ	வழிபல	சொல்லுவார்
மந்திரம்	தோத்திரம்	மகிமை	உடையன
என்பதை	நாமும்	இவர்சொல	அறிந்தோம்
இவரின்றி	நமக்கு	எவர்சொன்னார்	உண்மை
பிரமேந்	திரரின்	பெட்புறு	சீடர்
அவர்புகழ்	அவனியில்	அருளொடு	ஓங்க
வாழ்பவர்	தவமெனும்	வாரியில்	குளித்து
அறுபதாம்	ஆண்டு	அமைவுற	நிரம்பி
மேலும்	பல்யாண்டு	விளங்கி	நல்லறங்கள்
பற்பல	ஆற்றுக	பண்பாடு	அரிதாம்
அவர் பணி	கண்டு	அடைந்தனம்	இறும்பூது
இன்னும்	அவர் செயல்	எழில் பெற்று	வளர
இவரது	சேவை	இன்புடன்	வளர
பெற்ற	நலன்கட்கு	பெருமையாய்	நன்றியை
நாளும்	நாளும்	நாம் சொல்லி	வாழ்த்துவம்
வேலா	யுதனை	கந்தனை	வெற்றிவேல்
வேந்தனை	இறைஞ்சி	வேண்டுவோம்	ஏற்கென
சதாசி	வருக்கு	சதாபி	ஷேகமும்
செய்தே	மகிழ்ந்து	சீலம்	பெறவும்
அதுவரை	அவரது	அன்புச்	சேவையில்
ஆழ்ந்து	அமிழ்ந்து	அனுபவித்	திடநாம்
பேராசை	கொண்டோம்	பெருமளவில்	அதற்காக
சுவாமிகள்	உடலின்	சுகநலன்	கேட்டு
கந்தனின்	புகழும்	கருணையும்	அருளும்
பாடி	அவன்தாள்	பணிந்து	வாழ்த்துதுமே

இங்ஙனம்,

கரூர்
16—3—69

மனோன்மணி மாணிக்கவாசகம் B.A.

கடவுளை அடையும் வழி



பகவான்
ஸ்ரீ இராமகிருஷ்ண
பரமஹம்ஸர்

வேதாந்திகள் ஹடயோகத்தை அங்கீகரிப்பதில்லை. ஆனால் ராஜயோகம் வேதாந்தத்துக்கு உடன்பாடு. ராஜயோகத்தின் மூலம் ஜீவப்பிரம்ம ஐக்கியம் உண்டாகிறது.

மனிதன் எந்த மார்க்கத்தைப் பின்பற்றினாலும், அதன் மூலம் மனம் அடங்க வேண்டும். மனத்துக்கு அடிமையாயிருப்பவன் யோகியல்ல: மனதைக் கட்டியாளுபவன் யோகி. மனம் அடங்குமிடத்து, பிராணனும் ஒடுங்குகிறது. பிராணன் ஒடுங்கிய நிலை கும்பகம் எனப்படுகிறது. பக்தியின் மூலமாகவும் கும்பகம் வாய்ப்பதுண்டு.

ஹடயோகம் ராஜயோகம் என இரண்டு யோகங்கள் இருக்கின்றன. காயசித்திபண்ண விரும்புகிறவர்களும், அஷ்டசித்தியைப் பெற விரும்புகிறவர்களும், ஹடயோகம் பயிலுகின்றனர். பக்தி, ஞானம், ஈசுவரானுபூதி முதலியவைகளைப் பெற விரும்புகிறவர்கள், ராஜயோகம் பயிலுகின்றனர். இவ்விரண்டு யோகங்களுள் ராஜயோகமே மிகச் சிறந்தது.

இன்னதைச் செய்வேன் அல்லது இன்னதைச் செய்யமாட்டேன் என்று சாதகன் ஒருவன் தீவிரமாகத் தீர்மானம் செய்து கொண்டால், அவனுடைய அடங்கிய மனது அதற்கேற்றபடி நடந்து கொள்ளும்.

புதியதாகச் சலவை செய்து வந்துள்ள வெள்ளை வஸ்திரத்துக்கு நிகரானது மனது. அத்தகைய வஸ்திரத்தை எந்த நிறத்தில் தோய்த்தாலும், அந்த நிறத்தை எளிதில் எடுத்துக் கொள்ளும். மனது எதில் ஊறியிருக்கிறதோ, அதன் இயல்பை எடுத்துக் கொள்கிறது.

சித்த சுத்தி அடையப் பெற்ற வனுக்கே ஈசுவரனது தரிசனம் கிட்டுகிறது. ஜலதோஷத்தோடு கூடிய காய்ச்சலில் வருந்துகின்ற வனுக்கு, கொயினுப் பொடி எப்படி உதவும்? முதலில் ஜலதோஷம் போக வேண்டும்.

மனது உறுதியாகும் வரையில், யோகம் லபிக்காது. உலகப் பற்று என்னும் காற்று மனத்தைக் கலக்கிறது. எரிகிற தீபத்தோடு மனத்தை ஒப்பிடலாம். காற்றடியாதிருக்கும் பொழுது தீபம் அசையாதிருக்கிறது. மனத்துக்கு அத்தகைய நிலை வந்தால், சாதகனுக்கு யோகாரூட நிலை வருகிறது,

தராசுத் தட்டு ஒன்றில் கனமான பொருளை வைத்தால், தராசு முள் ஒருபக்கம் சாய்ந்து கொண்டு போகிறது. இரண்டு தட்டுகளிலும் எடை சமமாயிருக்குமானால், தராசுமுள் மேல் முள்ளுடன் சேர்ந்து நிற்கும். அந்த மேல் முள் போன்றவர் கடவுள். தராசு முள் போன்றது மனது. மனது கடவுளோடு சேர்ந்து நடுநிலையிலிருக்கும் பொழுது, யோகம் வாய்க்கிறது.

யோகி ஒருவன் பரமாத்மனை சுவானுபூதியில் அறிய விரும்புகிறான். ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்கும் இடையில் யோகம் பண்ணுவது, அவனுடைய குறிக்கோள். அவன் தனது மனத்தை விஷயாதிகளிலிருந்து விடுவித்து, பரமாத்மனிடம் நாட்டிவைக்க முயலுகிறான்.

தன் மனத்தை ஸ்திரப்படுத்துதல் பொருட்டு, யோகி ஒருவன் தனது சாதனத்தின் ஆரம்பதசையில் ஏகாந்தத்துக்குச் சென்று, ஓரிடத்தில் ஸ்திரமாக அமர்ந்திருந்து, மனத்தை ஒருமுகப்படுத்த முயலுகிறான்.

மனத்துக்கு வாசஸ்தானங்கள் ஏழு என்று வேதங்கள் மொழிகின்றன. அவ்வேழினுள், கீழிருக்கும் மூன்று நாபியிலும், குய்யத்திலும், குதத்திலும் உள. மனது அங்கிருக்கும் பொழுது, உலக விஷயங்களிலேயே அது உழல்கிறது.

நான்காம் ஆதாரம் ஹிருதயத்தில் உளது. மனது அங்கு வரும் பொழுது, ஜோதி தரிசனம் கிட்டுகிறது. ஆத்மபோதம் இலேசாக வருகிறது.

ஐந்தாவது ஸ்தானம் கழுத்தில் இருக்கிறது. மனது அங்கு வரும் பொழுது, சாதகனுக்கு ஆசைகள் அனைத்தும் அகன்று போய்விடுகின்றன. உலக விஷயங்களைப் பற்றி அவன் பேசான். அப்படி மற்றவர்கள் பேசும்பொழுது, அந்த இடத்தை விட்டு அவன் எழுந்துபோய்விடுவான்.

ஆறாவது ஆதாரம் புருவத்தில் இருக்கிறது. சாதகனுடைய மனது அதை எட்டும்பொழுது,

அல்லும் பகலும் அவனுக்குத் தெய்வக்காட்சியே கிட்டுகிறது. தெய்வக்காட்சி கிட்டுகிறது எனினும், அதில் லயமாக சாதகனுக்கு இயலாது. எஞ்சியிருக்கும் சிறிது அகங்காரம் அதற்குத் தடையாகிறது. கண்ணாடிக்கு அப்புறம் இருக்கிற வஸ்துவைக் காண்கிருேம். ஆனுல் அதைத் தொடமுடியாது. அத்தகைய நிலை ஆருவது ஞானபூமியில் உளது.

உச்சந்தலையில் சகஸ்ராரத்தில் ஏழாவது ஞானபூமி உளது. மனது அதை எட்டும்பொழுது ஜீவபோதம் போய் விடுகிறது. பிரம்மபோதமே எஞ்சியிருக்கிறது. அத்தகைய சமாதியை அடையும் பொழுது, சரீரம் நெடுநாளைக்கு இராது. இருபத்தோரு நாட்களில் அது உதிர்ந்து விடுகிறது. சித்தன் பிரம்மத்தில் ஒன்றித்துவிடுகிருன்.

தராசில் இரண்டு முட்கள் இருக்கின்றன. அவைகளுள் மேலேயிருப்பது அசைவதில்லை. தராசின் விட்டம் மேலும் கீழும் அசைவதற்கு ஏற்ப, கீழுள்ள முள் அசைகிறது. விட்டம் நடு நிலைக்கு வந்து விட்டால், கீழ் முள்ளும். அசைவதில்லை. மேல் முள்ளுக்கு நிகர் பரம்பொருள். கீழ் முள்ளுக்கு நிகர் மனது. நடு நிலை எய்துகிற மனது, பரம்பொருளைச் சாருகிறது.

சத்தியத்தின் மூலமாகவன்றிக் கடவுளை அடைய முடியாது.

உள்ளத்தை முதலில் தூய தாக்கு. பிறகு அதனுள் தெய்வத்தைப் பிரதிஷ்டை பண்ணு. வெறும் சங்க நாதத்தைக் கிளப்புவதால் ஆவதொன்றுமில்லை.

உலகக் கிருத்தியங்களைச் செய்து கொண்டிருப்பதற்கிடையிலும், ஒருவன் சத்திய விரதத்தைத் தீவிரமாக அனுஷ்டிக்க வேண்டும், இக்கலியுகத்தில் சத்திய விரதத்துக்கு நிகரான ஆத்ம சாதனம் இல்லை.

மேட்டில் நீர் நிலைத்து நிற்காது. அது பள்ளத்துக்கு ஓடி விடும். ஆதலால் பள்ளத்தில் சாகுபடி செய்வது எளிது. மேட்டு நிலத்தில் சாகுபடி செய்வது கடினமானது. பணிவுடன் இருப்பவன் இறைவன் அருளுக்குப் பாத்திரமாகிருன். வீண் கர்வம் படைத்திருப்பவனுக்கு அது வாய்க்காது.

எக்காரணத்தை முன்னிட்டும் மனிதன் பொய் பேசலாகாது. பொய் பேசிப் பழகுகிறவன், படிப்படியாக,பாபம் செய்வதற்கு அஞ்சாத கீழான மனப்பான்மை பெற்றுவிடுகிருன்.

கோணலான மனப்பான்மை யுடையவர்களுக்கும், ஈசனுடைய அருளுக்கும் வெகுதூரம். எளிமையும் யதார்த்தமும் உடையவன், அருளை எளிதில் பெறுவான்.

யானையின் தந்தம் முளைத்து வெளியே வருகிறது. ஆனுல் அது

மீண்டும் உள்ளே போவதில்லை. அங்ஙனம் மனிதன் ஒருவன் கொடுத்த வாக்கை நிறைவேற்றி வைக்கவேண்டும். சொன்ன சொல்லினின்று அவன் பிறழ்ந்து போய்விடலாகாது.

சாதகன் ஒருவன் சத்தியத்தினின்று சிறிதேனும் பிறழாதிருந்து பழகவேண்டும். சத்தியத்தில் நிலைத்திருப்பவனுக்கு, ஈசுவரானுபூதி வாய்க்கிறது.

இக்கலியுகத்தில் சத்தியமே பேசுதல் சிறந்ததொரு தபசு ஆகிறது. சத்தியத்தைக்கொண்டு கடவுளை அடையலாம்.

சாதனங்களையெல்லாம் பூர்த்தி பண்ணியான பிறகு, அவை யாவையும் அம்பிகையின் திருவடியில் சமர்ப்பித்தேன். ''தாயே, இதோ என்னிடத்துள்ள ஞானம் அஞ்ஞானம் ஆகிய இரண்டையும் உனக்குச்சமர்ப்பிக்கிறேன்; சுத்த பக்தியைத்தா. அருளையும் மருளையும், தாயே, உன்னிடம் ஒப்படைக்கிறேன்; சுத்த பக்தியைத் தா! நலம் கேடு ஆகியவைகளை உன்னிடம் சேர்த்து விடுகிறேன்; சுத்த பக்தியைத் தா. தர்மம் அதர்மம் ஆகியவைகளை உன்னிடம் விட்டு விடுகிறேன்; சுத்த பக்தியைத் தா. பாப புண்ணியங்களை உன்னிடம் சேர்த்துவிடுகிறேன்; சுத்த பக்தியைத் தா.'' இப்படியெல்லாம் இயம்பி, நான் பெற்ற தபோ பலன்களையெல்லாம் தாயின் திருவடிகளில் சமர்ப்பித்து விட்டேன். ஆனால் சத்தியத்தை இவ்வாறு சமர்ப்பிக்க என்னால் முடியவில்லை.

அப்பியாசத்தை இடையறாது செய்துவந்தால், மன அடக்கம் உண்டாகிறது. மன அடக்கம் பழகியவன் ஆமைக்கு ஒப்பாகிறான். ஆமை தன் அவயவங்களைச் சுருக்கிக் கொண்டபிறகு, நாம் எவ்வளவுதான் முயற்சி பண்ணினாலும் அவ் அவயவங்களைப் புறத்தில் கொண்டு வர முடியாது.

விறகுத் தலையன் ஒருவன், வனத்தினின்று விறகு சுமந்து கொண்டு வெளியே வருவதை, சாது ஒருவர் பார்த்தார். ''உள் நோக்கிப் போ'' என்று மொழிந்து விட்டு அவர் தம் வழியே போனார். அடுத்த நாள் விறகுத் தலையன் வனத்தினுள் மேலும் உள்நோக்கிச் சென்றான். சந்தனக் கட்டைகள் கிடைத்தன. சில நாட்களுக்குப் பிறகு, மேலும் உள்நோக்கிச் சென்றான். தாமிரக் கட்டிகள் கிடைத்தன. இன்னும் சில நாட்களுக்குப்பிறகு, மேலும் உள்நோக்கிச் சென்றான். வெள்ளிக் கட்டிகள் கிடைத்தன. கொஞ்ச நாளைக்குப் பிறகு, இன்னும் உள்நோக்கிச் சென்றான். பொன், வைரம் முதலியன கிடைத்தன. மானுடா, நீ உன் மனத்தினுள் உள்நோக்கிச் செல்லுமளவு, அரிய பொருளைப் பெறுவாய்.

உ

திருச்சிற்றம்பலம்

பாடற்(கு) இனிய வாக்(கு) அளிக்கும் ;
    பாலும் சோறும் பரிந்(து) அளிக்கும் ;
கூடற்(கு) இனிய அடியவர்தம்
    கூட்டம் அளிக்கும் ; குணம் அளிக்கும் ;
ஆடற்(கு) இனிய நெஞ்சேநீ
    அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய் ;
தேடற்(கு) இனிய சீர் அளிக்கும் ;
    சிவாய நமவென்(று) இடுநீறே !

கண்கொள் மணியை முக்கனியைக்
    கரும்பைக் கரும்பின் கட்டிதனை
விண்கொள் அமுதை நம் அரசை
    விடைமேல் நமக்குத் தோற்றுவிக்கும் ;
மண்கொள் வினையால் நெஞ்சே நீ
    அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய் ;
திண்கொள் முனிவர் சுரர்புகழும்
    சிவாய நமவென்(று) இடுநீறே !

—திருவருட்பா

பேரின்பம்



ஸ்ரீ திருமுருக
கிருபானந்த வாரியார்

இன்பம், உயிர்களாகிய நமக்கு ஐந்து வகைகளில் வருகின்றது.

1. உடம்பினுல் தொட்டு வருகின்ற இன்பம். நல்ல பஞ்சணையில் படுக்கின்றபோதும், மலர்களைத் தொடுகின்ற போதும், வெப்பமான காலத்தில் குளிர்ந்த நீரில் குளிக்கின்றபோதும், தட்பமான காலத்தில் வெந்நீரில் குளிக்கின்ற போதும் வருகின்ற இன்பமெல்லாம், உடம்பினுல் வருவது.

2. சுவையுள்ள இனிய உணவுகளை அருந்துவதாலும், உயர்ந்த பானங்களைப் பருகுவதனுலும் வருகின்ற இன்பம், நர்வினுல் வருவது.

3. நறுமணங்களை நுகருகின்றபோது வருகின்ற இன்பம், நாசியினுல் வருவது.

4. படக்காட்சி, நந்தவனக் காட்சி, நீர்வீழ்ச்சி, மலைக்காட்சி, அழகிய உருவக்காட்சி, பொருட் காட்சி இவைகளைக்காணும்போது வருகின்ற இன்பம், கண்களால் வருவது.

5. இசைப் பாடல்களையும், இனிய இசையைத் தரும் வீணை, புல்லாங்குழல், பிடில், மத்தளம், ஜலதரங்கம், நாதசுரம் இவைகளையும் கேட்பதனுல் வருகின்ற இன்பம், செவியால் வருவது.

இந்த ஐந்துவகைகளில் வரும் இன்பங்களில், ஒன்றைவிட ஒன்று மேலானது. உடம்பால் வரும் இன்பத்தைவிட, நாவினுல் வரும் இன்பம் உயர்ந்தது. நாவினுல் வரும் இனபத்தைவிட, நாசியால் வரும் இன்பம் உயர்ந்தது. நாசியால் வரும் இன்பத்தினும், கண்களால் வரும் இன்பம் உயர்ந்தது. கண்களால் வரும் இன்பத்தினும், செவி இன்பம் உயர்ந்தது.

இதனைத் திருவள்ளுவர்,

"செவியிற் சுவையுணரா
வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?"

என்று கூறுகின்ருர்.

"செவியினுல் வரும் மேலான இன்பத்தை நுகராது, கேவலம் நாவினுல் வரும் உணவு இன்பத்தை மட்டுமே நுகர்ந்து

கொண்டிருக்கின்ற மனிதர்கள், இறந்தால் என்ன, இருந்தால் என்ன? அவர்கள் யாது பயன் பெற்ருர்கள் ? அறிவற்ற அசடுகள்!'' என்று சற்று எரிச்சலாக அவர் கூறுகிருர்.

கவியின்பமும், செவியின்பமும் உயர்ந்தவை; மற்ற இன்பங்கள் தாழ்ந்தவை.

இனி, இந்த ஐந்துவகை இன்பங்களும் சிறியஇன்பங்களே. சில விஞடிகளில் தோன்றி மறையும் இன்பங்களே.

நல்ல கட்டில்; உயர்ந்த பஞ்சணை; மலர்ச்சயனம்; வெல்வெட்டுத் தலையணை; பன்னீர் தெளித்துள்ளது ; அதன் மீது படுத்தால் மிக்க இன்பம்.

ஆனுல், சில விஞடிகளில் கண் மூடி உறங்கி விட்டால், வெறும் தரையில் படுத்தவனும் பஞ்சணையில் படுத்தவனும் ஒன்று தான். தூங்குகின்ற வரையில் தான், பஞ்சணை இன்பம்.

அடுத்து, சுத்தமான பசுநெய்யில் பால்விட்டு, வாதாம் பருப்பு, அக்ரூட், பிஸ்தா, சாரைப்பருப்பு, முந்திரிபருப்பு, தேன், குங்குமப்பூ எல்லாம் போட்டுத் தயாரித்த மேலான அல்வா! நாவிலே வைத்தால் இன்பந்தான்!

ஆனுல் நுனி நாவிலே தான் இன்பம். நுனிநாவை விட்டு அந்த உயர்ந்த அல்வா அடி நாவுக்குச் சென்ருல், இன்பம் கிடையாது. கழுத்துக்குள் போனுல் ஒன்றுமே தெரியாது. வயிற்றுக்குள் போய் விட்டால், அதற்கு அல்வா என்ற பெயரே மாறி, வேறு பெயர் வந்துவிடும். வயிற்றுக்குள் போன பின், கேழ்வரகுக் களியும் ஒன்று தான், அல்வாவும் ஒன்றுதான்! எனவே, மிகப் பாடுபட்டுத் தயாரித்த நல்லுணவின் இன்பம் சில விஞடி தான்.

இவ்வாறே தான், முகர்ந்து வருகின்ற நறுமண இன்பமும், பார்த்து வருகின்ற காட்சி இன்பமும், கேட்டு வருகின்ற செவியின்பமும் சிறிது நேரமே இன்பந் தருபவை. இவை என்றும் இன்பந் தரமாட்டா.

இனி, இவற்றினும் மேலான பேரின்பம் ஒன்று உண்டு. அது ஞானத்தால் வருவது. அறிவை அறிபவர் அறியும் இன்பம் அது. அதனை, உயிர்களாகிய நாம் நினையாமலும், பெறுவதற்கு முயலாமலும், வறிதே உழல்கின்ருேம். அற்ப இன்பத்தையே நாடி அலைகின்ருேம். என்னே அறியாமை! தங்கக் கட்டியை நாடாமல் மண்ணுங் கட்டியை நாடுவது போலவும், காமதேனுவின் பாலை விரும்பாமல் காடி நீரை விரும்புவது போலவும் இருக்கின்றது.

''அந்தோ! மக்கள் கற்பகப் பூவை விடுத்துக் கள்ளிப் பூவை நாடித் தேடியலைகின்றனரே! என்னே பேதமை!'' என்று எண்ணி இரங்குகின்ருர் மாணிக்கவாசகர். கருணையே ஓர் உருவான அடிகளார். ''மக்களே! நீங்கள் நுகர்கின்ற இன்பம் அணுவளவு இன்பம். மேலான இன்பம் ஒன்று உளது. அது சிவானந்தம். அது கண்டாலும் இன்பம்; கேட்டாலும் இன்பம்; நினைத்தாலும் இன்பம்; எப்போதும் தித்திக்கும் தெய்வ இன்பம். அதனை நீங்கள் பெற வேண்டாவோ? அதனைப் பெற்று விட்டால் மற்ற இன்பங்கள் அந்த இன்பத்திற்கு முன், கதிரவன் முன் மின்மினிபோல் மறைந்து விடுமே!'' என்று எண்ணுகிருர். ஆன்மாக்களுக்கு உபதேசிக்க விரும்புகிருர்.

அந்த சமயம், ஒரு சிறந்த வண்டு இப்படியும் அப்படியும் இங்கும் அங்குமாக, மலர்களில் தினையளவுள்ள தேனை நாடியுழல் வதைக் கண்டார். அதனை முன்னிலைப் படுத்திக் கூறுகின்றார்:

"தினைத்தனை யுள்ளதோர்
பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும்
பேசுந்தோறும் எப்போதும்
அனைத்தெலும்(பு) உள்நெக
ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பி!"

"ஏ அரசவண்டே! நீ உண்ணுகின்ற தேன், தினையளவில் குறுகியது; வாடுகின்ற மலரில் உண்டாகியது.

"இறைவன் திருவடித்தாமரையிலிருந்து போரானந்தத் தேன் அருவி போல் சொரிந்து கொண்டிருக்கின்றது. அது இடையறாத இன்பத்தைத் தருகின்ற தேன்.

"ஆன்மாக்களின் பொருட்டு ஆண்டவன் வளைந்திருக்கின்றான்.

"ஆகவே, அரசவண்டே! வளைந்து அருள்கின்ற வள்ளல் பெருமான் திருவடித்தாமரையில் சென்று நீ ரீங்காரம் செய்!

"தினையளவான தேனை உண்டு மகிழ்கின்ற உனக்கு, ஒப்பற்ற ஒழியாத இன்பம் உண்டாகும்" என்று மாணிக்கவாசகப் பெருந்தகையார் கூறியருளுகின்றார்.

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி



ஜகத்குரு

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்

பரமேசுவரன் ஏகாகியாக, யோக தக்ஷிணாமூர்த்தியாக இருந்ததை அதில் சொல்லுகிறார்.

திருவேட்டீஸ்வரன் பேட்டை ஆலயத்தில் யோக தக்ஷிணாமூர்த்தி இருக்கிறார். அந்தத் தக்ஷிணாமூர்த்தியை, அந்தமங்கள சுலோகத்தில் யமி என்றுசொல்லியிருக்கிறார். எல்லாவற்றையும்நிக்கிரஹம் பண்ணுகிறவன் யமன். யமியும் எல்லாம் நிக்ரஹம் பண்ணினவன். இருக்கிறபொழுதே எல்லாவற்றையும் நிக்ரஹம் பண்ணினவன் ஸம்யமீ.

நமக்கு இரண்டு ஸமயங்களில் நிக்கிரஹம் உண்டாகிறது. தூங்குகிற பொழுது நிக்கிரஹம் இருக்கிறது. செத்துப் போகிற பொழுது நிக்கிரஹம் உண்டாகிறது. சாவும் ஒரு நித்திரை தான். தீர்க்க நித்திரை என்று அதற்கு ஒரு பெயர். ஒருவன் தூங்குகிறபொழுது ஆலோசனை, நினைவு முதலியவைகளில் ஒன்றாவது இருக்கிறதோ? இல்லை. ஆனால் விழித்துக் கொண்ட உடனே, எல்வாம் நிறைய வந்து விடுகின்றன. அவை தூங்கும் பொழுது எங்கே இருக்கின்றன. என்று தெரியவில்லை. அந்த மாதிரிதான், செத்துப்போகிற போதுகூட எல்லாம் அடங்கிவிடுகின்றன.

இப்படி தூங்கும்பொழுதும் சாகும் பொழுதும் அடங்குவது

கிருஷ்ணமிச்ரர் எழுதிய பிரபோத சந்திரோதயம் என்னும் கிரந்தமானது, கேவலம் வைராக்கியப் பிரதானமும் சாந்தப் பிரதானமும் ஆன நாடகமாதலால், பரமேச்வரன் சாந்தத்தோடும் வைராக்கியத் தோடும் இருந்த தக்ஷிணாமூர்த்தி அவஸரத்தைப் பற்றி, அதன் மங்கள சுலோகத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

ஸ்வாதீனமாக அடங்குவதல்ல. தூங்கும் பொழுது அடங்குபவை எல்லாம், மறுபடியும் விழிக்கும் பொழுது திரும்பி வந்துவிடுகின்றன. அவை எப்பொழுது திரும்பிவருமோ தெரியாது. சாவிலும் அப்படித்தான். சாகும் பொழுது அடங்கி யிருந்தாலும், வேறொரு தேஹம் வந்தபொழுது அதிகமாக வந்துவிடுகின்றன. அவை ஸ்வாதீனம் இல்லாமல் அடங்கி விடுவதால், ஸ்வாதீனமில்லாமல் திரும்ப வந்து விடுகின்றன. ஆகையால் அவற்றை ஸ்வாதீனமாக அடக்கவேண்டும்.

எல்லோரையும் அடக்குகிறவன் யமன். இந்திரியம் முதலியவைகளை ஸ்வாதீனத்தோடு அடக்குகிறவன் யமீ. நினைவோடு அவைகளை அடக்குகிறவன், கண்ணைப் "பார்க்காதே!" என்று சொன்னால், பாராமல் இருக்கவேண்டும்.

ஸ்வாமி அப்படிச் செத்தவரைப்போல இருக்கவில்லை. ஸூரியனைப்பளாரென்று அடித்துப் பல்லை உதிர்த்தார். பிக்ஷாடனம் பண்ணினார். கூத்தடிக்கிறார். இப்படி நிரம்ப வேலை செய்கிறார். பக்தர்களுக்கு வரம் கொடுத்துவிட்டு, ஊரூராகத் திண்டாடுகிறார். நம்முடைய காரியத்துக்காகத்தான் திண்டாடுகிறார். எல்லாம் அடங்கி இருந்த ஸமயம் ஒன்றுண்டு. ஸ்வாமி எப்பொழுதும் உள்ளே அப்படித்தான் இருக்கிறார். உள்ளே அப்படியிருந்தால், வெளியிலே எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

வெளி அடக்கம் இருந்தால் தான் உள்ளடக்கம் நமக்கு உண்டாகும். "திருஷ்டியைக் குறைத்துக்கொள், கூட்டத்தில் சேராதே, இந்திரிய வியாபாரங்களைக் குறைத்துக் கொள்" என்று சொல்லுவது அதற்காகத்தான். வெளியிலே அதிகமாகப் பிரவிருத்தி இருந்தால், உள்ளே அடங்காது. அதனால் "காட்டுக்குப்போ, பணத்தை வைத்துக் கொள்ளாதே" என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். அந்தப் பிரயோஜனம் கிடைத்து விட்டால் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஸ்வாமி உள்ளே அடக்கமாக இருக்கிறார்; வெளியிலே கூத்தடிக்கிறார். ஒரு ஸமயம் உள்ளே இருந்தது போல் வெளியில் இருப்பார். பார்வதி கல்யாணத்திற்கு முன், அப்படி ஒரு ஸமயம் இருந்தார். அப்படி இருந்தாரென்று, குமார ஸம்பவத்தில் காளிதாஸ மகாகவி எழுதியிருக்கிறார். பார்வதிக்கு முதலில் திரயம்பகராகத் தரிசனம் கொடுத்தார். மூன்று கண்களையுடைய ஸம்யமியைப் பார்வதி பார்த்தாள் என்று அந்தக்கவி சொல்லுகிறார்.

நமக்கு இரண்டு கண்களே இருக்கின்றன. அவைகளுக்கு இருப்பது வெளிப்பார்வை. இந்த இரண்டு கண்களைத் தவிர, மூன்றாவது கண் ஒன்று உண்டு. அது பரமேசுவரனுக்குத்தான் இருக்கிறது. அதைப்பற்றி பிரபோத சந்திரோதயக்காரர், முன் கூறிய சுலோகத்திற் சொல்லுகிறார். ஸ்வாமி யமியாக இருந்தார். எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு இருந்தார். தேஜஸ் - ஆத்மஜ்யோதிஸ் - பிரகாசிக்கிறது. தரிசன மாத்திரத்திலேயே, அந்த ஆத்மதேஜஸ் தெரிகிறது. ஸ்பஷ்டமாக லலாட நேத்திரம் தெரிகிறது. அந்த வியாஜத்தில் ஆத்மஜ்யோதிஸ்

தான் பிரகாசிக்கிறது. அந்த ஜ்யோதிஸ், ஸமஸ்தலோக வியாபகமாக இருக்கிறது. அது எல்லாவற்றிற்கும் ஆதாரம்.

தேஹமத்யநாடி ஸுஷும்னு நாடி. அதில் யோகாப்பியாஸம் பண்ணிக் காற்றைவிட்டு, ஆறு சக்கரங்களின் வழியாக பிரம்மரந்திரம் வரையிற்போய், தன் மனத்தில் சாந்தி என்கிற பத்தினியை வைத்துக்கொண்டால், ஆனந்தம் உண்டாகிறது. மனது சாந்தம் குறையாமல் இருந்தால்—அதாவது சாந்தியென்னும் ஸம்ஸாரம் இருந்தால்—எப்பொழுதும் ஆனந்தந்தான். மற்ற ஸம்ஸாரத்தால் துன்பந்தான் உண்டாகிறது. எவ்வளவு குணம், பக்தி உடையவளாக இருந்தாலும், பக்கத்தில் இருப்பதற்கு பிரதிபந்தகம் ஏற்பட்டால் வருத்தம் உண்டாகிறது. அப்படியில்லாமல் எப்பொழுதும் மனத்தில் இருந்துவிட்டால், துக்கமே இல்லை.

ஸ்வாமியினிடம் ஆத்மஜ்யோதிஸ் பிரகாசிக்கிறது. தபஸ்விரூபமாக இருக்கிறார். லோகம் முழுவதும் பிரகாசம் இருக்கிறது. பிரம்மஸ்வரூபமாகக் காணப்படுகிறது. உள்ளே நிறைந்திருக்கும் சாந்தத்தை வெளியிலும் வைத்துக்கொண்டு, ஆத்ம நிஷ்டையைப் பண்ணிக்கொண்டு, சிஷ்யர்களுக்கு ஞான முத்திரையைக் காட்டிக்கொண்டு இருக்கிறார். உள்ளே இருக்கிறது வெளியிலும் ஜகத்திற்குத் தெரியட்டுமென்று, யோக நிஷ்டையில் இருக்கிறார். பராசக்தியாகிய சாந்தியை மனத்தில் வைத்துக்கொண்டு, அதனால் நித்தியானந்தத்தோடு இருக்கிறார். லலாடநேத்திரரூபமாக ஆத்ம ஜ்யோதிஸ் பிரகாசிக்கிறது. பின்னால் விவேகனை அரசனாக வைத்து நாடகம் எழுதப்போகிற படியால், இந்த மாதிரி ஸ்தோத்திரத்தை அவர் பண்ணினார்.

அந்த ஸம்யமி யார்? சந்திரமௌளீசுவரர் தான். சந்திரனுக்கு ஸோமன் என்று ஒரு பெயர் உண்டு. ஸோமவாரம், சந்திர மௌளீசுவரருடைய சிரசிலிருக்கிற சந்திரனுக்குரிய நாள். அஷ்டமியில் அர்த்த சந்திரன் இருப்பான். சந்திரமௌளீசுவரர் அர்த்த சந்திரனைத்தான் மௌலியில் வைத்திருக்கிறார். அவர் சந்திரார்த்தமௌலி.

அஷ்டமியில் ராத்திரி தான் சாப்பிடவேண்டும்; திவா உபவாஸம் இருக்கவேண்டும். ஞாயிறு, இரண்டு பர்வகாலங்கள், இவைகளில் ராத்திரி உபவாஸம் இருக்கவேண்டும். சதுர்த்தசி அஷ்டமிகளில் பகலில் சாப்பிடக்கூடாது. கார்த்திகை ஸோமவாரத்திலும் சாப்பிடக்கூடாது. உபவாஸ விசேஷம் அன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை



பாரதஸிம்ஹம் பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்

அனந்தராம தீக்ஷிதர்

முடிவில்லாத பல வியாதிகள் ஓர் மனிதனுக்கு ஏற்படுவதற்குக் காரணத்தை, விதுரர் திருத ராஷ்டிரனுக்குக் கூறுகிறார். அதாவது, பிறருடைய பொருள்களை யும், அழகையும், வீர்யத்தையும், சிறந்த பாக்யங்களையும், பூஜை யையும் கண்டு பொறாமைப் படுகிறவனுக்கு, முடிவில்லாத பல வியாதிகள் ஏற்படும் என்றார்.

வித்யையால் ஏற்படும் மதம் (கர்வம்), தனத்தினால் ஏற்படும் மதம், நற்குலப் பிறப்பினால் ஏற்படும் மதம், இம்மூன்றும் ஸாதுக்களுக்கு தமமாய் (அடக்கமாய்) ஆகின்றன.

அஸத்துக்களை ஸாதுக்கள் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென எப்பொழுதாவது வேண்டினார்களேயானால், சிறிது கூட அந்தக் காரியத்தைச் செய்யாமல், அவர்கள் தம்மை வேண்டிய மாத்திரத்தில் (அஸத்துக்கள்) தம்மை ஸத்தாக நினைத்துக்கொண்டு விடுகின்றனர்.

பிராணிகள் யாவைக்கும் ஸாதுக்களே கதி. ஸாதுக்களுக்கு ஸாதுக்களே கதி. அஸத்துக்களுக்கும் ஸாதுக்கள் தாம் கதி. ஒரு போதும் அஸத்துக்கள் ஸாதுக்களுக்கு கதியல்ல.

நல்ல வஸ்திரம் தரித்தவன் சபையை ஜெயித்து விடுவான். (முன்பின் தெரியாதவர்கள்கூட, நல்ல வஸ்திரம் தரித்தவனை கெளரவிப்பார்கள் எனக் கருத்து.) நல்ல ஆகாரத்தை விரும்புகிறவன், பசுக்கள் உள்ளவனாய் இருந்தால் அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டு விடுவான். நல்ல வாஹனமுள்ளவன், வழியைஜெயித்துவிடலாம். நல்ல நடத்தை உள்ளவன் எல்லா உலகங்களையும் ஜெயித்துவிடலாம்.

மனிதனுக்கு நல்ல நடத்தையும், நல்ல எண்ணமும் தான் முக்யமானவை. அவைகள் எவனிடம் இல்லையோ, அவனுக்கு உயிரினாலும், பணத்தினாலும், பந்துக்களாலும் ஒரு பயனுமில்லை.

தரித்ரர்கள் எப்பொழுதும் நிரம்ப உணவுகளை நன்கு சாப்பிடுகிறார்கள். அவர்களுக்கு எப்பொழுதும் பசி இருக்கிறது. அந்தப் பசியானது, எந்த உணவிலும் ருசியை உண்டுபண்ணுகிறது. அம்மாதிரியான பசியோ, ருசியோ, பணக்காரர்களிடம் மிகவும் துர்லபம்.

பெரும்பாலும், பணக்காரர்களுக்கு சாப்பிடுதற்கான சக்தி இருப்பதில்லை, தரித்ரர்களுக்கு மரக்கட்டைகளைச் சாப்பிட்டாலும் ஜெரித்துவிடும்.

கீழ்ப்பட்ட மனிதர்களுக்கு பிழைப்பில்லாமையால் பயமும், நடுத்தர மனிதர்களுக்கு மரணத்தினால் பயமும், மேலான மனிதர்களுக்கு அவமானத்தினால் மிக பயமும் ஏற்படும்.

தர்மம் அர்த்தம் இவைகளை விட்டுவிட்டு எவன் இந்திரியங்களுக்கு வசமாக இருக்கிறானோ, அவன் சீக்கிரத்தில் லக்ஷ்மீ, உயிர், பொருள், மனைவி இவைகளிலிருந்து நழுவி விடுவான்.

தப்பு செய்தவர்களுடன் நல்லவர்கள் சேருவதால், இவர்களையும் அவர்கள் செய்த குற்றம் வந்து அடைந்து விடும். எவ்வாறு பச்சைக் கட்டைகள் காய்ந்த கட்டைகளுடன் சேர்ந்தால் அவையும் எரிந்து விடுமோ, அது போல!

அஸூயை இல்லாமை, நேர்மை, பரிசுத்தம், சந்தோஷம், இனிமையான சொல், இந்திரியஜயம், ஸத்யம், சிரமப்படாமல் காரியம் செய்தல், இவைகளெல்லாம் அயோக்யர்களிடம் காணமுடியாது.

உள்ளத்திலுள்ள ஸ்ரீபகவானை அறிதல், துயரத்தைக் கொடுக்காத காரியத்தை செய்தல், கஷ்டங்களை ஸஹித்தல், நித்யம் தர்மத்தை அநுஷ்டித்தல், அடக்கமாகப் பேசுதல், அடக்கமாக தானம் செய்தல், இந்த குணங்கள் மட்டமான மனிதர்களிடம் இருப்பதில்லை.

அயோக்யர்களுக்குப் பிறரை ஹிம்ஸிப்பதே பலம். அரசர்களுக்கு தண்டிப்பதே பலம். ஸ்திரீகளுக்கு கணவனுக்குச் செய்யும் பணிவிடையே பலம். குணசாலிகளுக்குப் பொறுமையே பலம்.

ஓ அரசனே, வாக்கை அடக்குவது மிகவும் கடினமான காரியம். ஆச்சரியமாயும் நல்ல கருத்துள்ளதாயுமுள்ளபேச்சுக்களை, நிரம்பப் பேசுவது மிகக் கடினம்.

பலவிதமான அழகான சொற்களைப் பேசினால், அந்தச் சொற்

கள் கேட்பவர்களுக்கும் சொல்லு கிறவர்களுக்கும் மங்களத்தை நிரம்ப அளிக்கும். ஓ அரசனே, கெட்ட பொருளுடன் கூடிய சொல்லோவெனில், பெரும் துய ரங்களை அளிப்பதற்குக் காரண மாகிவிடும்.

அம்பினல் அடிபட்ட புண் ஆறி விடும். கோடரியால் வெட்டப் பட்ட மரம் துளிர்த்து விடும். கெட்ட சொற்களினுல் மனத்தில் ஏற்பட்ட புண்ணுனது, ஆறவே ஆருது.

கர்ணி, நாளீகம், நாராசம் என்னும் பலவித அம்புகள் சரீ ரத்தில் போடப்பட்டால், அவற் றைப் பிடுங்கி எடுத்து விடலாம். கெட்ட சொல்லாகிற அம்பைப் போட்டால், அதை உள்ளத்திலி ருந்து எடுக்கமுடியாது. அங் கேயே தங்கிவிடும்.

எவனுக்கு அவமானத்தை அளிக்க வேண்டுமென தேவர்கள் நினைக்கின்றனரோ, அவனது நல்ல அறிவைக் கெடுத்துவிடுகின் றனர். அதனுல், அந்த மனிதன் தப்பான காரியங்களைச் செய்ய விரும்புகிருன்.

உலகத்திலுள்ள அறுபத்தாறு கோடி தீர்த்தங்கள் யாவற்றிலும் ஸ்நானம் செய்வதும், எல்லா பிராணிகளிடத்திலும் நேர்மை யாய் இருத்தலும் ஸமமாகும். நேர்மையாக இருத்தல் அதிக மான சிறப்பு உடையதாகவும் ஆகலாம்.

ஓ அரசனே, உமது புத்ரர் களான பாண்டவர்களிடத்தில் நேர்மையாக நடந்துகொள்ளும். அதனுல் இவ்வுலகில் சிறந்த கீர்த் தியை அடைந்து, பின்பு புண்ய லோகங்களையும் அடைவீர்.

ஓ புருஷசிரேஷ்டனே, ஒருவன் செய்த புண்ய கார்யத்தினுல் ஏற் பட்ட புகழ் இவ்வுலகில் எவ் வளவு காலம் விளங்குகிறதோ, அவ்வளவு காலம் அந்த மனிதன் புண்ய லோகங்களில் விளங்கு வான். (ஆதலால்தான், புண்ய புருஷர்கள் சத்திரம், கோவில், வேத பாடசாலை, தண்ணீர்ப் பந் தல், குளம், ஸன்யாசிகள் தங் கும் மடம் இவற்றை ஆக்குவது; பசுக்கள் உராய்ந்துகொள்ளும் கல் நாட்டுவது; படித்துறைகள், சுமை தாங்கிகள் கட்டுவது முத லிய தர்மங்களைச் செய்து வைக் கின்றனர். அதை பின்பும் பரா மரிக்கப் பொருள்களை வைத்து, தாம் பரலோகம் சென்றுலும் அந்த தர்மங்கள் நீடித்து நடக் கும்படி செய்து, தம் புகழ் இவ் வுலகில் எப்பொழுதும் இருக்கும் படி செய்கிறுர்கள்.)

பொய்யாகத் தீர்ப்புக் கூறிய வனும், பொய்யாகச் சாக்ஷி சொன்னவனும், மூன்று துக்கங் களை அடைவார்கள். அதாவது, மனைவி இருக்கும்போது மற்றொரு மனைவியை மணந்து கொண்டு வந்த தன் கணவனைக் கண்ட முந்திய மனைவி, இரவு முழுவதும் எவ்விதம் கண்ணீர் விட்டுத் துய ரத்தை அடைவாளோ; மேலும் சூதாட்டத்தில் சொத்து முழு வதையும் வைத்துத் தோல்வி அடைந்தவன் அந்த இரவு முழு வதும் எந்த துக்கத்தை அடை வானே; பெரிய சுமையைச் சுமந்து வெய்யிலில் வெகுதூரம் நடந்து வந்தவன் அந்த இரவு முழுவதும் உடம்பு வலியினுல் எவ்வாறு துக்கப்படுவானே; அவ் வாறு பொய்ச் சாக்ஷி கூறிய வனும், மாருகத் தீர்ப்புக் கூறிய வனும், ஆயுளுள்ளவரை கஷ் டத்தை அனுபவிப்பார்கள்.

ஓ ராஜ சிரேஷ்டனே, பூமி முழுவதையும் அடைவதற்காக

நீ பொய் சொல்லுவது சரியல்ல. பிள்ளைகளிடத்தில் இருக்கும் அன்பினால் ஸத்யம் பேசாமல், பிள்ளைகள் மந்திரிகள் இவர்களுடன் நீர் அழிந்து போகக்கூடாது.

ஒரு மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு நல்ல காரியத்தில் மனத்தைச் செலுத்துகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனுக்கு எல்லாப் பொருள்களும் கைகூடும்.

வேதம் கற்றவன் ஆசாரமில்லாமல் கபடமாய் வெளி வேஷத்துடன் இருப்பானேயாகில்; குயில் குஞ்சுகள் தம் தாய்களால் காக்கையின் கூடுகளில் வைக்கப்பட்டிருந்த போதிலும், இறக்கை முளைத்ததும் காக்கையின் கூடுகளை விட்டுப் போவதுபோல், அவனுடைய மரண காலத்தில் அந்த வேதங்கள் ஆசாரமில்லாதவனை விட்டு வெளியில் சென்றுவிடும்.

கள் குடித்தல், சண்டையிடுதல், பெரும் கூட்டத்தை எதிர்த்தல், கணவன் மனைவி இருவர்களையும் பிரித்தல், பங்காளிகளுக்குள் மனஸ்தாபத்தைச் செய்தல், அரசனை விரோதித்தல், ஸ்திரீ புருஷர்களுக்குள்ளே கலகம் செய்தல், கெட்ட மார்க்கத்தில் செல்லுதல் இவைகளை விட்டுவிட வேண்டுமெனப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

இரேகை பார்த்துச்சொல்லுகிறவனையும், முன்பு திருடனாகஇருந்து பின்பு வியாபாரம் செய்கிறவனையும், யோகி வேஷம் பூண்டு கயிறு கம்பி வைத்துககொண்டு குறி சொல்லுகிறவனையும், வைத்யனையும், சத்ருவையும், நண்பனையும், பாடுகின்றவனையும், ஆக இந்த ஏழு பேர்களையும் ஸாக்ஷியாகவோ, மத்யஸ்தர்களாகவோ வைக்கக்கூடாது.

பிறர்தன்னைப் பூஜிப்பதற்காகச் செய்யும் அக்னி ஹோத்ரமும், பிறர் கொண்டாடுவதற்காக வைத்துக்கொண்ட மௌனமும், பிறர் தன்னை பூஜிப்பதற்காகக் கற்ற வேதமும், யாவரும் தன்னைப் பெரியவன் எனச் சொல்லுவதற்காகச் செய்யும் தியாகமும், தப்பான எண்ணத்தினால் மாறுபாடாகச் செய்யப்படுவதால் அவைகள் பயத்தை அளிக்கின்றன. இவைகளையே ஈச்வரார்ப்பண புத்தியோடு செய்தால் பயத்தைப் போக்கிவிடும்.

வீட்டிற்குத் தீவைப்பவனும், விஷமிடுகின்றவனும், மனைவியை வ்யபிசரிக்கச் செய்து பிழைப்பவனும், ஸோமக் கொடியை விற்கின்றவனும், பிறரைக் கொல்லக் கூடிய ஆயுதங்களைச் செய்கிறவனும், கோள் சொல்லுகிறவனும், நண்பனுக்கு துரோகம் செய்கிறவனும், பிறருடைய மனைவியிடம் சேருகிறவனும், கர்பத்திலிருக்கும் சிசுவைக் கொல்லுகிறவனும், குருவின் மனைவியைப் புணர்கின்றவனும், கள் குடிக்கும் பிராமணர் முதலிய மூன்று வர்ணத்தார்களும், மிகக் கடூரமான மனமுடையவனும், காக்கை புண்ணைக் குத்தவதுபோல் துயரமடைந்தவனை மேன்மேலும் துயரப் படுத்துகிறவனும், பரலோகமில்லையெனச் சொல்லுகிறவனும், வேதங்களை தூஷிப்பவனும, உபநயநம் முதலிய ஸம்ஸ்காரங்களை விட்டவனும், ஆடு மாடு முதலியவற்றை ரஹஸ்யமாய்க் கொல்லுகிறவனும், தன்னைக் காக்கவேண்டுமென சரணமடைந்தவனை சக்தி இருந்தும் காக்காமல் கைவிடுகின்றவனும், ஆக இவர்கள் யாவரும் பிரம்மஹத்தி செய்தவர்களுக்கு ஸமமாவார்கள்.

யும் வணங்குகிருயா?

தர்மத்தைவிட்டுத் தனத்தை மாத்திரம் ஸம்பாதிக்காமலிருக்கிருயா? குடும்ப போஷணைத்திற்கு வேண்டிய தனத்தை ஸம்பாதிப்பதை விட்டு, தர்மத்தைமாத்திரம் ஸம்பாதிக்காமலிருக்கிருயா? தர்மத்தையும் அர்த்தத்தையும் விட்டு, காமத்தில் அகப்பட்டு இம்மூன்றையும் கெடுத்துக் கொள்ளாமலிருக்கிருயா?

காலையில் தானம் முதலிய தர்மங்களேயும், பிறகு ராஜ்யங்களேயும், ராத்திரியில் காமத்தையும், ஒன்றிற்கொன்று விரோதமில்லாமல் பிரித்து அனுஷ்டிக்கிருயா?

பரலோகமில்லே என்று வாதிப்பது, பொய் சொல்வது, கோபிப்பது, அஜாக்கிறதை, காரியங்களே தாமதமாகச் செய்வது, எல்லா மேன்மைக்கும் காரணமான ஸாதுக்களேத் தரிசிக்காமலிருப்பது, சோம்பல், இந்திரியங்களே அடக்காமலிருப்பது, மந்திரிகளின் உதவியில்லாமல் ராஜ்ய காரியங்களேத் தானே ஆலோசிப்பது, விபரீதமான அர்த்தங்களேச் சொல்லுகிறவர்களுடன் ஆலோசிப்பது, நிச்சயித்த காரியங்களே ஆரம்பிக்காமலிருப்பது, தன் ஆலோசனைகளே முன்னதாகவே வெளியிடுவது, காலையில் எழுந்தவுடன் கண்ணுடி முதலியவைகளேப் பார்ப்பதென்ற மங்கள காரியங்களே அனுஷ்டிக்காமலிருப்பது, யாரைப் பார்த்தாலும் எழுந்து மரியாதை செய்வது என்ற இந்த பதினுன்கும், அரசன் விலக்க வேண்டிய தோஷங்களில் முக்கியமானவை. நீ அவைகளே விலக்குகிருயா?

வேட்டை, சூதாட்டம், பகலில் தூங்குவது, பிறரைத் தூஷிப்பது பெண்களுடனே காலம் கழிப்பது மதுபானம், பாட்டு கூத்து வாத்திய மென்றவைகளில் காலத்தைக் கழிப்பது, காரியமில்லாமல் அலேவதென்ற இந்தப் பத்தையும் விலக்கி வருகிருயா?

நீ ஸம்பாதித்த தனம், அதை பிறருக்குக் கொடுப்பதாலும், நீ அனுபவிப்பதாலும் பயன் பெறுகின்றதா? உன் பாரியை உனக்கு அனுகூலமாக இருக்கிருளா? நீ சாஸ்திரங்களேக் கேட்டதற்கு அடையாளமாக, நல்ல ஆசாரமுள்ளவனுகவும், நல்ல நடத்தையுள்ளவனுகவும் இருக்கிருயா?

நான் இதுவரையில் சொல்லி வந்த நீதி, தீர்க்காயுஸையும், கீர்த்தியையும், தர்மம் காமம் அர்த்தமென்ற புருஷார்த்தங்களேயும் கொடுக்கக்கூடியது. உன் புத்தி அந்த வழியில் செல்கின்றதா?

ஸன்மார்க்கத்தை அனுஸரித்துப் பெரியோர்களால் நித்திக்கபடாத இந்த ஆசாரம், நமது பிதாவால் அனுஷ்டிக்கப்படுகிறது. நமது ப்ரபிதாமஹர் முதலிய முன்னேர்கள் இதையே அனுஷ்டித்து வந்தார்கள். நீயும் இதையே அனுஷ்டித்து வருகிருயா?

மேற் சொன்ன நீதிகளே அறிந்து நமது முன்னேர்களேப் போலக் குடிகளேத் தர்மமாக ஆண்டு வந்தால், நீ இவ்வுலகத்தில் பூமண்டலாதிபதியாக இருப்பாய். ●

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலே, 4 தணிகாசலம் செட்டி ரோடு, சென்னே-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டி பஸார், தியாகராயநகர், சென்னே-17.

தாமதமில்லாமல் செய்து முடிக்கிருயா? சீக்கிரத்தில் செய்து முடிக்காத காரியத்தின் பயனைக் காலம் கொள்ளையிடுகிறது.

வெகுமதி பெறுதல், லஞ்சம் வாங்குதல் முதலிய தீயவழக்கங்களில்லாதவர்களும், மனோவாக்குக் காயங்களில் சுத்தர்களுமான உத்தம மந்திரிகளை, பெரிய காரியங்களிலேயே உபயோகிக்கிருயா?

நாஸ்திக பிராம்மணர்களுடன் பழகாமலிருக்கிருயா? சாஸ்திரங்களுக்கு விபரீதமான அர்த்தங்களை உபதேசிப்பதில் இவர்களுக்கு அதிகத் திறமையுண்டு. இவர்கள் உண்மையான ஞானத்திற்கு விரோதமான ஞானத்தை உடையவர்கள். பாலர்களைப் போல் ஒன்றும் தெரியாதவர்கள்; ஆனல் தங்களைப் பெரிய பண்டிதர்களென்று எண்ணுகிறவர்கள். வேதமார்க்கத்திற்கு விபரீதமான புத்தியையுடையவர்கள்.

புராணங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் பெரியோர்களுடைய ஸம்பிரதாய பரம்பரைப்படி அர்த்தம் செய்யாமல், கேவலம் தர்க்கத்தைப் பிரயோகித்து, அவை இஹத்திலும் பரத்திலும் பயனற்றவை என்று வாதிப்பவர்கள்.

பயிரிடுகிறவர்களும், பசுக்களை மேய்க்கிறவர்களும், உன் ஆளுகையில் எல்லையற்ற ஐசுவரியத்தை அடைந்து உன்னிடத்தில் பிரீதி வைத்திருக்கிருர்களா? கொடுக்கல் வாங்கல், ஏற்றுமதி இறக்குமதி முதலிய வியாபாரங்களைச் செய்து வர்த்தகர்கள் உன்னை அண்டி ஸுகமாகப் பிழைக்கிருர்களா? அரசன் தன் ராஜ்யத்தில் வஸிக்கும் ஜனங்களெல்லோரையும் தர்மமாக ஆள வேண்டும். ஆகையால் இவர்களைக் காப்பாற்றி வருகிருயா?

ஒவ்வொரு நாளும் காலையில் நன்ருக அலங்கரித்துக் கொண்டு ராஜஸபையில் வந்து பிரஜைகளுக்குத் தரிசனம் கொடுக்கிருயா?

உன் வரவு அதிகமாகவும் செலவு குறைவாகவும் இருக்கிறதா? தகாதவர்களுக்கு, உன் திரவியத்தை ஏராளமாகக் கொடுக்காமலிருக்கிருயா?

தேவதைகள், பிராம்மணர்கள் பித்ருக்கள், யாசகர்கள், வீரர்கள், மித்திரர்கள் இவர்களுக்கு உன் ஐசுவரியத்தை அதிகமாகச்செலவு செய்கிருயா?

தனவான்களுக்கும் ஏழைகளுக்கும் வியாஜ்யம் நேர்ந்தால், உன் நியாயாதிகாரிகள் தனவானிடத்திலிருந்து லாபத்தை அடையஉத்தேசிக்காமல் தீர்ப்புச் செய்கிருர்களா?

அரசன் தன் ராஜ்யத்தில் நடக்கும் நியாயா நியாயங்களை விசாரிக்காமல், கேவலம் தன் சௌக்கியத்தையே நாடி ஆண்டு வந்தால், சரியாக விசாரிக்காமல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கண்ணீர் விட்டால் அது அவனுடைய மனைவி மக்களையும் பசுக்களையும் நாசம் செய்யும்.

வயது சென்றவர்களையும் பாலர்களையும், உத்தமமான வைத்தியர்களையும், வெகுமானங்களாலும் ஸ்நேகத்தாலும் இனிமையான வார்த்தைகளாலும் வசப்படுத்துகிருயா?

குருமார்களையும், பெரியோர்களையும், தபஸ்விகளையும், தேவதைகளையும், அதிதிகளையும், தேவதைகள் வஸிக்கும் மரங்களையும், யோக மஹிமையால் இவ்வுலகத்துஸுகங்களில் ஆசையில்லாதவர்களையும், பிராம்மணர்களை

இராமன் கேட்ட கேள்விகள்

[வனவாசம் சென்ற இராமனைத் தேடி, பரதன் காட்டுக்கு வருகிறான். இராமன் மிகவும் கனிவோடு வரவேற்று, அவனை உச்சிமோந்து தன் மடிமேல் உட்கார வைத்துக்கொண்டு, அவனுடைய க்ஷேமலாபங்களை விசாரிக்கிறார். அப்படி விசாரிக்கும் போது, அவர் கேட்கும் கேள்விகள் பெரிதும் பொருட்செறிவு வாய்ந்தவை. தர்மசாஸ்திரங்களின் சாரமாக விளங்குபவை. ஆகையால், அந்தக் கேள்விகளில் சிலவற்றைக் கீழே தருகிறோம்.
— ஆசிரியர்]

சடையைத் தரித்தவனும், மரவுரிகளைத் தரித்துக்கொண்டிருப்பவனும், கைகூப்பி, பிரம்மதினத்தின் முடிவில் ஒளியில்லாத சூரியன்போல் வெறுந்தரையில் விழுந்து நமஸ்கரிப்பவனுமான பரதனை, ஸ்ரீராமன் பார்த்தார்.

தேகம் மெலிந்து, நிறம் மாறி, பரதன் இவனே என்று அடையாளம்கண்டுபிடிக்கமுடியவில்லை. ஆயினும் ஒருவாறு தெரிந்து கொண்டு, தன்னுடன் பிறந்த பரதனை அன்புடன் வாரி எடுத்து அணைத்துக்கொண்டார்.

பிறகு, ராமன் அவனை உச்சி முகர்ந்து மடிமேல் உட்கார வைத்துக் கொண்டு, தன் துக்கத்தை அடக்கிக் கொண்டு, இவ்வாறு குசலப்பிரசனம் செய்தார்.

இந்தக் காட்டிற்கு எப்படி வந்தாய்? நமது பிதாவுக்கு ஸமீபத்திலிருந்து ஸகல பணிவிடையும் நீயே செய்ய வேண்டியதல்லவா? அவர் எங்கே போய் விட்டார்? அவர் உன்னை விட்டுப் பிரியப் பொறுக்க மாட்டாரே? அவர் உயிரோடிருந்தால் நீஇந்தக் காட்டிற்கு வர நியாயமில்லையே?

சிரேஷ்டமான குலத்தில் பிறந்தவரும், ஸத்தியம் தவறாதவரும், எண்ணிறந்த அசுவமேதங்களையும் ராஜஸூயங்களையும் செய்தவரும், தர்மத்திலிருந்து விலகாதவருமான தசரதச் சக்கரவர்த்தி ஸுகமாக இருக்கிறாரா?

தேவதைகளையும், மாதா பிதாக்களையும், குருக்களையும், ஜ்ஞாதிகளையும், பெரியோர்களையும், வித்வான்களையும் பிராம்மணர்களையும் நீ திருப்தி செய்விக்கிறாயா?

உன் மந்திரிகள் புத்திமான்களாகவும், நீதிசாஸ்திர நிபுணர்களாகவும், உத்தம குலத்தில் பிறந்தவர்களாகவும், பிறருடைய எண்ணங்களை ஸூக்ஷ்மமாகத் தெரிந்து கொள்கிறவர்களாகவும் உன்னைப் போல் நம்பத் தகுந்தவர்களாகவும் இருக்கிறார்களா?

தகுந்த காலத்தில் படுக்கிறாயா? தகுந்த காலத்தில் விழிக்கிறாயா? விடியற்காலத்தில் ஐசுவரியத்தை ஸம்பாதிக்கும் வழிகளை ஆலோசிக்கிறாயா?

ஸுலபமான ஸாதனங்களால் விசேஷப் பயன் கிடைக்கக்கூடிய காரியத்தை, நன்றாக ஆலோசித்து

தாங்க முடியவே இல்லை. இது எந்தப் பாப கர்மாவின் பயனே தெரியவில்லை. நான் உட்கொள்ளக்கூடிய உணவு எது? தயவு செய்து தெரிவிக்கவேணும்'' என வினவினேன்.

'' 'அதைக்கேட்டு பிரஹ்மதேவன் ''ச்வேத! உன் உடலில் உள்ள ருசியான மாம்ஸங்களே உன்னுடைய உணவாகும். காட்டில் நீ தவம் புரியுங்காலத்தில், உன்உடலை நன்ருகவளர்த்து வைத்திருக்கின்ருய். விதைக்காத விதை முளைக்காது. பலவித ஆஹாரங்களை உட்கொண்ட போதிலும் உனக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஒருநாள் நீ புசிக்கப் போகுந் தருணத்தில், ஓர் சந்நியாசி உன்னிடம் பிக்ஷை கேட்டார். உணவில் உள்ள அதிக ஆசையால், நீ அவருக்கு பிக்ஷை கொடுக்க மறுத்துவிட்டாய். நீ மிகத் தீவிரமாகத் தவம் புரிந்திருந்தபோதிலும், சொற்ப தானங்கூடச் செய்தவன் அல்ல. தவத்தின் பயனுக இவ்வுலகத்திற்கு வந்தாய். தானம் செய்யாததாலும், சந்நியாசிக்குப் பிக்ஷையளிக்காத காரணத்தாலும், பசியும் தாஹமும் உன்னை வாட்டுகின்றன. உன் உடலை நீ தடவித்தடவி வளர்த்ததால், அதில் உள்ள மாம்ஸத்தையே நீ புசித்து வரவேண்டும். எப்பொழுது மஹான் அகஸ்தியர் உன்னிடம் வருகின்ருரோ, அப்பொழுதுதான் உன்னுடைய பசியும் தாஹமும் தீர்ந்து இவ்விடத்திலேயே சுகமாக வாழ்ந்து வருவாய்'' எனக் கூறினர்.

'' 'முனிவரே! அன்று முதல் இன்றுவரை, என் பாபத்தின் பயனுக இந்தக் கேவலமான ஆஹாரத்தையே பிரதி தினம் உட்கொண்டு வருகிறேன். என் உடலும் அழிந்தபாடில்லை. என்னுடைய பசியும் தாஹமும் தணியவுமில்லை. என் பாக்கிய வசத்தால் இப்பொழுது தங்களை சந்திக்கும்படி நேர்ந்தது. தாங்கள்தான் அகஸ்திய முனிவராக இருக்கவேண்டும். மனுஷ்யசஞ்சாரமில்லாத இக்காட்டில், வேறு ஒருவர் பிரவேசிக்க முடியாது. என்னுடைய இந்த ஆபரணத்தைப் பெற்றுக்கொண்டு, என்னை இக்கொடிய பாவத்திலிருந்து விடுவிக்க வேண்டும். இந்த ஆபரணத்திலிருந்து சுவர்ணம், தனம், வஸ்திரம், பலவித உணவுகள், நகைகள் மற்றும் விரும்பிய பொருள்கள், போகங்கள் எல்லாவற்றையும் பெறலாம்' எனக் கூறி, இந்த ஆபரணத்தை என்னிடம் கொடுத்தான். நானும் அதைப் பெற்றுக்கொண்டேன். உடனே, கீழே கிடந்த அவன் உடல் அழிந்து விட்டது. ச்வேதனும் பசி தாஹமற்றவனுய் மிகுந்த சந்தோஷத்துடன் பிரஹ்ம லோகத்திற்குச் சென்ருன்.''

இதிலிருந்து அதிதிகளுக்கு உணவு அளிக்காமல் இருத்தல் மிகக் கொடிய பாபம் எனத் தெரியவருகிறது அல்லவா?

அது வேறு எங்கும் செல்லாமல், அந்த சவத்திற்கு அருகில் சற்று உயரத்தில் வந்து திடீர் என்று நின்றுவிட்டது. அதில் சுவர்க்க போகங்களை அநுபவித்துக்கொண்டிருக்கும் ஓர் உத்தம புருஷனையும், அவனைச் சுற்றிக் கானம் செய்து கொண்டும், நர்த்தனம் செய்து கொண்டும், சத்ரம், சாமரம் முதலியவற்றால் உபசாரம் செய்துகொண்டும் இருக்கும் பல அப்ஸரஸ்திரீகளையும் கண்ணுற்றேன்.

''மிக வியப்புடன் அந்த விமானத்தை நான்பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, அதில் வீற்றிருந்த அந்த திவ்யபுருஷன், அந்த விமானத்திலிருந்து கீழே இறங்கி அந்த சவத்தின் அருகில் சென்று அதைக் கடித்துத் தின்றான். வேண்டிய வரையில் தின்றுவிட்டு, கடைசியில் அக்குளத்தில் இறங்கி ஆசமனம் செய்து, மறுபடியும் அந்த விமானத்தில் ஏறத் திரும்பினான்.

''அப்பொழுது நான் அவனிடம்சென்று 'தாங்கள்யார்? தேவலோகவாசி என்று தோன்றுகின்றதே? ஆனால் மிகவும் நிந்திக்கத் தகுந்த இந்த ஆஹாரத்தை ஏன் உட்கொள்ளுகின்றீர்கள் என்பது எனக்குப் புலப்படவில்லை. இது மிக ஆச்சரியமாக இருக்கிறது. இதன் காரணத்தை நான் அறிய விரும்புகிறேன்' எனவினவினேன்.

''என் வார்த்தையைக் கேட்ட அந்த தேவபுருஷன், கை கூப்பிய வண்ணம் பேசத் தொடங்கினான்.

'' 'மஹாரிஷே! முன்ஜன்மத்தில் நடந்த என்னுடைய கதையைச் சொல்லுகிறேன், கேளுங்கள். அவரவர்கள் செய்த புண்ணியத்தையோ பாவத்தையோ, அனுபவித்து தானே ஆகவேண்டும்? முடியாது என்று சொன்னால் விடுமோ?

'' 'விதர்ப்ப தேசத்தில் ஸுதேவன் என்று ஓர் அரசன் இருந்தான். அவனுடைய இரு பிள்ளைகளுள் நான் ஒருவன். ஸுரதன் என்று பெயர்கொண்ட என் தம்பி ஒருவன். என் பெயர் ச்வேதன். என் தகப்பன் காலகதியடைந்தபின் நான் இராஜ்ய பரிபாலனம் செய்து வந்தேன். ஒரு சமயம், இனி இவ்வளவு வருஷங்கள் நான் ஜீவித்திருக்கக் கூடும் என்பதை அறிந்து, பாக்கி வருஷங்களில் தவம் செய்ய விரும்பி, என் தம்பியை அரசனாக நியமித்துவிட்டு இந்த வனத்திற்கு வந்தேன். இங்கு பல வருஷங்கள் தீவிரமாகத் தவம் புரிந்து, அதன் பயனாக பிரஹ்ம லோகத்தை அடைந்தேன். அங்கு சென்ற பின்னும், பசியும் தாஹமும் மிக அதிகமாக என்னைத் துன்புறுத்தின. அதனால் மிகவும் களைப்படைந்த நான், பிருஹ்ம தேவனிடம் சென்று ''பகவந்! இந்த லோகத்தில் பசி, தாஹம் முதலிய துன்பங்களே இரா எனப் பெரியோர்கள் கூறினார்கள். ஆனால் இங்கு வந்த பின்னும் எனக்கு பசியும் தாஹமும்

தற்காலம் உள்ள அரசர்கள் அனே வரும் அவனுடைய ஸந்ததியில் தோன்றியவர்களாதலால், அவர் களிடமும் நான்கு திக்பாலர்க ளுடைய அம்சங்களும் இருக்கின் றன. அவற்றுள், அவ்வப்போது உசிதமான கட்டளைகளைப் பிறப் பிக்கும் இந்திரனுடைய அம்சத் தால், பிரஜைகள் அளிக்கும் கப் பம், வெகுமானம் முதலியவற் றைப் பெற்றுக் கொண்டு, பிர ஜைகளைப் பாவங்களிலிருந்து விடுவிக்க அரசன் கடமைப்பட் டிருக்கிறான். ஆதலால், ஏ ராம! தங்களிடமுள்ள இந்திரனது அம் சத்தால் இந்த ஆபரணத்தைப் பெற்றுக்கொண்டு, என்னைப் பாவங்களிலிருந்து அவசியம் விடு விக்க வேண்டும். இது தங்களு டைய கடமை.

முனிவருடைய நியாயமான அந்த வார்த்தையைக் கேட்டு, ஸ்ரீராமர் அந்த ஆபரணத்தைப் பெற்றுக்கொண்டு, ''இவ்வளவு அழகான, அற்புதமான நகை தங்களுக்கு யாரிடமிருந்து எவ் வாறு கிடைத்தது?'' என வின வினார்.

அகஸ்தியர் சொன்னார்: ''இது முன்பு திரேதா யுகத்தில் நடந்த ஓர் அற்புதமான வரலாறு. சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு சமயம் தவம் செய்ய மிகவும் தகுதியுள்ள ஒரு ஸ்தலத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக, பல காடு களுக்குச் சென்றேன். அப்பொ ழுது ஓரிடத்தில் ஓர் காட்டைக் கண்டேன். அது மிக விசாலமாக இருந்தது. ஆனால் அங்கு மனி தனோ, மிருகமோ, பக்ஷியோ எது வும் காணப்படவில்லை.

''அங்குள்ள அழகிய மரங் களும், செடி கொடிகளும் கண் களைக் கவர்ந்தன. அந்த வனத் தின் நடுவில், ஓர் விசாலமான குளம். அதில் சக்ரவாகம், ஹம் ஸம் முதலிய பல அழகிய பறவை கள், தாமரை, உத்பலம் முத லிய பல புஷ்பங்கள் எல்லாம் அந்த வனத்தின் சோபையை அதிகரித்தன. காட்டில் பறவை கள் சஞ்சரிக்காததும், குளத்தில் மட்டும் பறவைகள் சந்தோஷ மாக வாழ்ந்துகொண்டிருப்ப தும் மிக ஆச்சரியமாக இருந்தது.

''நிழல் சூழ்ந்த அக் குளக்கரை யிலேயே, அன்றுமுழுவதும் தங்கி யிருந்தேன். காலையில் எழுந் திருந்து அக்குளத்திற்குச் செல்லு கையில், அங்கு ஓர்மனிதனுடைய உடல் வாட்டமில்லாமல் வளர்ந் திருந்ததைக் கண்டேன். உயிரற் றதானலும் உயிருடன் இருப்பது போலவே மிகுந்த சோபையுடன் அது விளங்கிற்று. மிக ஆச்சரியத் துடன் அதைப்பற்றிய சிந்தனை யுடனேயே, அக்குளக்கரையில் ஒரு முகூர்த்த காலம் நின்று கொண்டிருந்தேன்.

''அப்பொழுது, மனோ வேக மாகச் செல்லும் ஓர் அற்புத விமானம், ஆகாயத்திலிருந்து இறங்கி வருவதைக் கண்டேன்.

திக்குச் செல்லவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். இராமரும் அதற்கு இணங்கினார்.


பிறகு விச்வகர்மா என்றதேவச் சிற்பியினால் நிர்மாணம் செய்யப் பட்டதும், திவ்விய தேஜஸுடன் பிரகாசித்துக் கொண்டிருப்பது மான ஓர் ஆபரணத்தைக் கொண்டு வந்து, ''ராம! இதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதை நீ அணிந்துகொண்டு நான் பார்க்க ஆசைப் படுகிறேன். சூரியனைப் போல் பிரகாசிக்கும் இந்த விசித்திரமான ஆபரணம் உன்னிடந்தான் இருக்கவேண்டும். இது ஒருவரால் எனக்கு கொடுக்கப் பட்டது. அதைப் பிறருக்குத் தானம் செய்தால், அதற்குப் பயன் மிக அதிகம். ஆதலால் நான் இதை உனக்கு முறைப்படி கொடுக்கின்றேன். பெற்றுக் கொள்ள வேண்டும்'' எனக் கூறினார்.

அதைக் கேட்ட இராமர், ''முனிவரே! பிரதிக்ரஹம்என்பது பிராம்மணர்களுக்கு உரியது. க்ஷத்திரியனாகப் பிறந்த நான் எப்படி பிரதிக்ரஹம் செய்யலாம்? அதிலும் ஓர் பிராம்மணனால் கொடுக்கப்படும் வஸ்துவை ஏற்றுக்கொள்ளலாமா? இவ்விஷயத்தைப்பற்றித் தாங்களே தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்'' என உரைத்தார்.

அதற்கு முனிவர் பதில் கூறிய தாவது: இராம! முன்னொரு காலத்தில், கிருதயுகத்தில், இப் புவியிலுள்ள ஜனங்கள், ஆட்சி புரியும் அரசன் அற்றவர்களாக இருந்தனர். தேவர்களுக்கு மட்டும் இந்திரன் அரசனாக இருந்தான். அப்பொழுது பூமியிலுள்ள பிரஜைகள், 'தேவர்களுக்குத் தாங்கள் அரசனாக இருப்பதுபோல், எங்களுக்கும்ஓர் சிறந்த மனிதனை அரசனாக நியமிக்கவேண்டும். அவனுக்கு நாங்கள் செய்யக்கூடிய பூஜைகளைச் செய்து பாபமற்றவர்களாக இருக்க விரும்புகின்றோம். இனி அரசன் இல்லாமல் நாங்கள் இப் புவியில் வசிக்க இயலாது' என வேண்டிக்கொண்டனர்.

இந்திரனும் இவ் விஷயத்தை பிரஹ்ம தேவனிடம் தெரிவித்தான். அவர் ஓர் சிறந்த மனிதனை சிருஷ்டித்து, இந்திரன், யமன், வருணன், குபேரன் என்ற நான்கு திக்பாலர்களுடைய அம்சங்களையும் அவனுக்கு அளித்து, அவனைப் பிரஜைகளுக்கு அரசனாக நியமித்தார். அந்த அரசன் பெயர் க்ஷுபன்.

''அவன் இந்திரனுடைய அம்சத்தால், பிரஜைகளுக்கு அவ்வப்போது உசிதமான கட்டளைகளைப் பிறப்பித்தான். வருணனுடைய அம்சத்தால், பிரஜைகளை வளர்த்தான். குபேரனுடைய அம்சத்தால், அவர்களுக்குப் பொருளை அளித்துவந்தான். யமனுடைய அம்சத்தால், குற்றம் புரிந்த பிரஜைகளைத் தண்டித்துவந்தான்.



தன் உடலைத் தானே தின்றவன் கதை

வேத வேதாந்த வித்வரத்னம் பிரம்ம ஸ்ரீ

ஆர். முத்துக்கிருஷ்ண சாஸ்திரிகள்

தாராள மனத்துடன் அதிதிகளுக்கு உணவை அளித்து, அவர்கள் புசித்த மிச்சத்தையே உண்ண வேண்டும். ச்வேதன் என்ற அரசன், அதிதிகளுக்கு அளிக்காமல் தானே உணவை உட்கொண்டதால், தன் உடலில் உள்ள மாம்ஸத்தையே பிறகு புசிக்கவேண்டியவனாக ஆனான்.

போஜன காலத்தில் பசி என்று வருகின்றவன் எப்படி இருந்தாலும், அவனுடைய குலம், கோத்ரம் எதையும் விசாரிக்காமல், அவனுக்கு அன்னமளிக்க வேண்டும் என தர்மசாஸ்திரம் கூறுகின்றது. அவ்விதம் செய்யாது போனால், அது மிகக் கொடிய பாவம் எனக் கருதப் படுகிறது. இவ்விஷயமாக, வால்மீகி ராமாயண உத்தர காண்டத்தில், ச்வேதன் என்ற அரசனுடைய அற்புதமான கதை ஒன்று காணப்படுகிறது.

ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகத்திற்குப்பின் இராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டிருக்கையில், ஒரு சமயம் அகஸ்தியமுனிவருடைய ஆசிரமத்திற்குச் சென்றார். முனிவரும் மிக அன்புடன் ராமரை எதிர் கொண்டழைத்து, அர்க்கியம் பாத்யம் முதலியவற்றை அளித்து உபசரித்தார். ''ஏ ராம! நீயே நாராயணன். உன்னிடமே இவ்வுலகம் முழுவதும் நிலை பெற்றிருக்கிறது. ஸமஸ்த பூதங்களுக்கும் நீதான் பிரபு. நீயே புராண புருஷன்'' என்றெல்லாம் போற்றி, ''இன்று முழுவதும் என் ஆசிரமத்திலேயே தங்கிவிட்டு, நாளை தான் அயோத்

அமைந்துள்ளது. இதன் தத்துவமாவது: உயிர்களெல்லாம் இறைவனை விட்டு நீங்கி, உலகத்திலே மனம் போனவாறு சென்று, உலக போகங்களை அநுபவித்து, இறைவனை மறந்து திரிகின்றன. இந்த நிலை, பசுக்கள் தம் தலைவனை நீங்கி, மேய்ச்சற் காட்டில் தம் மனம் போனவாறு போய்ப் புல்லை மேய்ந்து, சிதறி நிற்கும் நிலைக்கு ஒத்திருக்கின்றது. மாலைக் காலமானதும் ஆயன் குழலை ஊதியதும், அவையெல்லாம் தம் தலைவனாகிய அவனிடம் வருகின்றன. அதுபோல, இறைவனும் பிரபஞ்சத்திலே திரிந்து நடக்கும் ஆன்மாக்களைத் தன்னிடம் சேர்த்துக்கொள்ளும் தத்துவத்தை, இம்மூர்த்தம் விளக்குகின்றது.

கோபுரத்தைத் தூல இலிங்கமாக நினைத்து வணங்கி, பின் வெளிப் பிராகாரங்களைச் சுற்றி, கோயிலுட் செல்லவேண்டும்.

கொடி மரத்தைக் கண்டதும், இறைவனையடைந்தவர் அழிவற்ற ஆனந்தத்தில் நிலைத்திருப்பார் என நினைந்து, கொடிமரத்தை சூக்ஷ்மலிங்கமாக எண்ணி வணங்க வேண்டும்.

கொடிமர தரிசனம் செய்த பின்னர், மூல மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு, மூன்று தரம் வலம் வந்து வணங்கி, உட்செல்லுவதற்காக பலி பீடத்தின் அருகிற் செல்லவேண்டும். பலி பீடத்தின் அருகிற் சென்றதும், நம்மிடமிருக்கும் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாத்சரியம் என்பவற்றைப் பலி கொடுத்ததாக உறுதிபண்ண வேண்டும்.

பிரதட்சிணம் செய்யும்போது யாது நினைத்தல் வேண்டுமென்பது: ஐந்து பிராகாரங்களையும் அன்ன மய கோசம் முதலிய பஞ்ச கோசங்களாக மதித்து, ஒவ்வொரு கோசத்திலும் ஆன்மா உழன்று தெளிந்து அதை விடுத்து மேலே செல்வதாக நினைக்க வேண்டும். இங்ஙனம் ஐந்து பிராகாரங்களையும் கடந்தால், கடவுளது சாமீப்ய பதத்தை அடையலாம் என்னும் உண்மையையும் உணர்தல் வேண்டும்.

இறைவனைத் துதிக்குங்கால், நாம் அவரிடம் ஒரு பொருளையோ, பல பொருட்களைக் குறித்தோ வேண்டுவது அவசியமற்றதாகும். ஏனெனில், அவன் நமக்கு வேண்டுவன வேண்டியாங்கு ஈவானாகின்றான். சர்வ ஜீவன்களின் நலங்களை தன் அறக் கருணையாலும், மறக் கருணையாலும் அவனே ஆற்ற வல்லவன். யாவையும் அறியும் ஆற்றலுடையவனும் அவனே. ஒரு தந்தை தனது அருமைக் குழந்தை கேட்டதெல்லாவற்றையும் கொடுப்பதாக நாம் அறிவோமில்லை. அவனுக்கு எச்சமயத்தில் எது வேண்டுவதோ, அதனைத் தருகின்றான். அதே போலுந்தான் இறைவனுமாகின்றான்.

தேவியும் திருமாலும்

கடவுளின் அருளாகிய சக்தி யினையே, தேவியென வைத்து வழிபடுகின்றோம். அந்தச் சக்தி இல்லையானால், கடவுளுமில்லை. சூரியன் தன் ஒளியைக்கொண்டு இருளை ஓட்டி வெளிச்சத்தைக் கொடுப்பதுபோல, இறைவனும் உயிர்களின் மயக்கத்தை சக்தி யைக் கொண்டு ஒழித்து, உயிர் களுக்கு மெய்யறிவினைத் தரு கின்றான்.

விளக்குச் சுடரில் தீயுமிருக் கிறது, சூடுமிருக்கிறது. தீயி லிருந்து சூட்டினையோ, சூட்டி லிருந்து தீயினையோ பிரிக்க முடி யாதபடி, அவை ஒன்று சேர்ந் திருக்கின்றன. அதுபோல, ஆண்டவனிடமிருந்து சக்தி யையோ, சக்தியிடமிருந்து ஆண்டவனையோ பிரிக்க முடி யாது. ''அருளது சத்தியாகும் அரன் தனக்கு, அருளையின்றித் தெருள் சிவமில்லை, அந்தச் சிவ மின்றிச் சத்தியில்லை'' என்று சிவ ஞானச் சித்தியாரும் இதனையே கூறுகிறது.

ஏகநாயகன் உலகத்தைப் படைத்து, அளித்து, அழிக்கக் கொண்ட மும் மூர்த்திகளில், காத்தல் தொழிலைக் கொண்ட மூர்த்தி திருமால். ஆலயங்களில் இவரது திருவுருவத்தை நின்ற திருக்கோலமாகவும், இருந்த திருக்கோலமாகவும், ஆதிசேஷ சயனத்தில் கிடந்ததருக் கோல மாகவும் வைத்து வணங்கப்படு கிறது. இப்பெருமான் சயனங் கொண்டிருக்கும் பொழுது, உலகு உயிர் அனைத்தும் அவரது திருவயிற்றிலே அடங்கியிருப்பன வாம்.

ஒரு கையில் பாஞ்ச சன்யம் என்ற சங்கினையும், மற்றொரு கையில் சுதர்சனம் என்ற சக்கரத் தினையும், ஒரு கையில் நாந்தகம் என்ற கதையினையும், இவர் கொண்டிருக்கிறார். ஒரு கை அபயஹஸ்தமாக அமைந்திருக் கிறது. மார்பில் கௌஸ்துப மணியினையும், ஸ்ரீவத்ஸம் என்ற மருவினையும், நெற்றியில் கஸ்தூரி திலகத்தையும் கொண்டிருக் கிறார்.

இப்பெருமான் கொண்டருளிய அவதாரங்களில், கிருஷ்ணாவ தாரம் மக்கள் மனத்தை மிகக் கவர்வது. இந்த மூர்த்தம், பக்க லில் பசு நிற்க அப்பெருமான் குழல் வாசிக்கும் வடிவத்தில்

தாமரை மலரில் அமர்ந்தவளாயும், கையில் தாமரை மலர்களைத் தரித்தவளாயும் விளங்கிய அந்தத் திருமகளைப் பார்த்து, மஹரிஷிகள் ஸ்ரீஸூக்தத்தினால் ஸ்தோத்ரம் செய்தார்கள். கந்தர்வர்கள் கானம் செய்தார்கள். அப்சர மங்கையர் நர்த்தனம் செய்தார்கள். கங்கை முதலான புண்ய தீர்த்தங்கள், அந்த லக்ஷ்மீ தேவியை நீராட்டுதற்காக அருகில் வந்துற்றன. திக்கஜங்கள் எட்டும் அந்தத் தீர்த்தங்களைத் தங்கக் குடங்களால் எடுத்து, அலைமகளுக்கு அபிஷேகம் செய்தன.

அந்த சமயத்தில், பாற் கடலிலிருந்து ஸ்ரீ துளசீ தேவி வெளிப்பட்டு வந்தாள்.

ஸ்ரீ லக்ஷ்மீ தேவிக்குத் தாமரை மலர்களாலான ஒரு தெய்விக மாலையைத் திருப்பாற் கடல் அளித்தது. விசுவகர்மா பல வகையான ஆபரணங்களை அளித்தார். அந்த ஆபரண அலங்காரங்களுடன் விளங்கிய ஸ்ரீ ஜகன்மாதாவாகிய திருமகள், எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே ஸ்ரீ மஹா விஷ்ணுவின் மார்பகத்தைப் போய் அடைந்தாள். மஹா விஷ்ணு ஸ்ரீ துளசீ தேவியையும் எடுத்து மாலையாகத் தரித்துக் கொண்டார்.

விஷ்ணுவின் மார்பகத்தில் இருந்தபடியே, ஸ்ரீ லக்ஷ்மீ தேவி தன் கருணை நிறைந்த கண்களால் தேவர்களைப் பார்த்தாள்.

தேவர்கள், பகவானின் திருவருளினால் வீசிய சுகமான காற்றை அனுபவித்து, பலவான்களாக விளங்கினார்கள்.

அப்போது, மத்தாகப் பயன்படுத்தப்பட்ட மந்தரமலை நடுக்கம் அடைந்தது. உடனே ஸ்ரீமந் நாராயணமூர்த்தி ஓர் ஆமையாக வடிவெடுத்து, அந்த மலையைத் தன் முதுகில் தாங்கிக் கொண்டார். அது மட்டும் அல்ல. அவர் தாமும் ஒரு தேவனாக வடிவெடுத்துத் தேவர்கள் மத்தியில் நின்று கொண்டார். அதே சமயத்தில் ஓர் அசுரனாகவும் வடிவெடுத்து அசுரர்கள் மத்தியிலும் நின்று கொண்டார். இவ்வாறு இரு தரப்பிலும் அவர் இரு வேறு வடிவங்களுடன் நின்று கொண்டு, வாசுகியை மிக வேகமாக இழுத்துக் கடையத் தொடங்கினார். அவ்வாறு கடைவதனால் வாசுகி துன்பமுறாதவாறு, அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தியையும் அவர் வாசுகிக்கு அருளினார்.

தேவர்களும் அசுரர்களும் இவ்வண்ணம் கடலைக் கடைந்து கொண்டு இருக்கும்பொழுது, **சுரா** என்று சொல்லப்படுகிற வாருணீ தேவியானவள், மதத்தினால் சுழலும் கண்களை உடையவளாய், அந்தக் கடலிலிருந்து வெளிக் கிளம்பி வந்தாள். வந்து, அசுரர்களின் அருகில் போய் நின்றாள்.

ஆனால், அசுரர்கள் அவளை மதித்து ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, அவள் தேவர்களின் பக்கம் சென்றாள். ஸ்ரீபகவானின் ஆலோசனைப்படி, தேவர்கள் அவளை மதித்து ஏற்றுக் கொண்டார்கள்.

சுராவை ஏற்றுக் கொண்டதால், அதிதியின் புத்திரர்களாகிய தேவர்களுக்கு **சுரர்கள்** என்று பெயர் வந்தது. சுராவை ஏற்றுக் கொள்ளாததால், திதியின் புத்திரர்களான தைத்தியர்களுக்கு **அசுரர்கள்** என்று பெயர் வந்தது.

பின்னர் பாற்கடலிலிருந்து காமதேனு வெளிப்பட்டது. அப்சர மங்கையர்களின் கூட்டம் தோன்றியது. பாரிஜாதம் என்னும் தெய்விக விருக்ஷமும் கிளம்பி வந்தது.

அடுத்தபடியாக, சந்திரன் கிளம்பினான். அவனைப் பரமேஸ்வரன் தன் தலையில் அணிந்து கொண்டார். விஷம் வெளி வந்தது. அதனைப் பாம்புகள் ஏற்றுக் கொண்டன. கௌஸ்துபம் என்னும் மணி வெளிப்பட்டது. அதைத் திருமால் தன் மார்பில் அணிந்து கொண்டார். தன் இலைகளின் வாசனையால் உலகை மயக்கமுறச் செய்யும் **விஜயா** எனப்படுகிற ஒரு மகா மூலிகை வெளிக் கிளம்பி வந்தது. அதை பைரவர் ஏற்றுக் கொண்டார்,

பிறகு, திவ்யமான வஸ்திரத்தைத் தரித்தவராய், கையில் அமிருத கலசத்துடன் பகவான் தன்வந்தரி வெளிப்பட்டார். அவரைக் கண்டதும், தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள் முதலிய யாவரும் களிப்படைந்தனர், அவரையடுத்து, ஸ்ரீ மஹாலக்ஷ்மீ தேவி வெளிப்பட்டாள்.

கொள்ளை கொண்டார்கள். தேவர்களேயும் கதறக் கதற அடித்தார்கள்.

இவற்றை யெல்லாம் கண்டு பயந்து நடுங்கினவனாய், இந்திரன் தன் நகரை விட்டே ஓட்டம் எடுத்தான். அவனுடன் சேர்ந்து, மற்ற தேவர்களும ஓடினார்கள. எல்லோருமாக சத்ய லோகத்தை அடைந்து, தங்களுக்கு அசுரர்களால் நேர்ந்த ஆபத்தை பிரம்ம தேவரிடம் கூறி முறையிட்டார்கள்.


பிரம்ம தேவருக்கும் என்ன செய்வது என்று தோன்றவில்லை. எனவே, இந்திரனையும் தேவர்களையும் அழைத்துக் கொண்டு, அவர் திருப்பாற் கடலுக்குச் சென்றார். எல்லோரும் சேஷ சாயியான ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை ஸ்தோத்திரம் செய்தார்கள். பகவானும் அவர்களுடைய ஸ்துதிக்கு இரங்கிக் காட்சியளித்தார். அவரிடம் தேவர்களும் இந்திரனும் சரணடைந்து, தங்களை அசுரர்களின் கொடுமைகளிலிருந்து காப்பாற்றுமாறு இறைஞ்சினார்கள். பகவான் சொன்னார்:

"தேவர்களே! உங்களேயும் இந்திரனையும் நான் காப்பாற்றுகிறேன். அசுரர்களை வெல்வதற்கு, உங்களுக்கு ஒரு யுக்தியும் கூறுகிறேன். முதலில் நீங்கள் அசுரர்களுடன் சிறிது காலத்துக்கு சமாதானம் செய்து கொள்ளுங்கள். விசேஷமான மூலிகைகளைக் கொண்டு வந்து பாற்கடலில் போடுங்கள். பின்னர் அந்தப் பாற்கடலைக் கடைந்தால் அமிருதம் கிடைக்கும். அந்த அமிருதத்தில் அசுரர்களுக்கும் பங்கு தருவதாகச் சொல்லி, அவர்களையும் உதவிக்குச் சேர்த்துக் கொள்ளுங்கள். மந்தர கிரியை மத்தாகவும், வாசுகியைத் தாம்பாகவும் அமைத்துக் கொண்டு, தேவர்களும் அசுரர்களும் ஒன்று கூடிக் கடலைக் கடையுங்கள். அதிலிருந்து எழுகின்ற அமிருதத்தை அசுரர்கள் அடையாதபடி நான் பார்த்துக் கொள்கிறேன். தேவர்களாகிய நீங்கள் மட்டுமே அதைச் சாப்பிடுவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். அமிருதத்தை அருந்தி விட்டால், உங்களுக்கு மரணமே ஏற்படமாட்டாது. அப்புறம் அசுரர்களாலும் உங்களை ஜெயிக்க முடியாது!"

பகவானுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டதும், இந்திரனும் தேவர்களும் தம் கலக்கம் நீங்கிப் பெரிதும் ஆறுதல் அடைந்தார்கள். அவருடைய ஆலோசனைப்படியே, முதலில் அசுரர்களுடன் அவர்கள் சமாதானம் செய்து கொண்டார்கள். பின்னர் தேவர்களும் அசுரர்களும் மிகவும் விசேஷமான மூலிகைகளைக் கொண்டு வந்து, பாற்கடலில் நிரப்பினார்கள். மந்தர கிரியை எடுத்து வந்து, கடலில் மத்தாக நிறுத்தினார்கள். வாசுகிப் பாம்பை அதில் நாணாகப் பூட்டினார்கள். அந்தப் பாம்பின் தலைப்பாகத்தை அசுரர்களுக்கு ஒதுக்கிவிட்டு, வால் பாகத்தை தேவர்கள் பிடித்துக் கொண்டார்கள். பிறகு, இரு சாராருமாகக் கடலைக் கடையத் தொடங்கினார்கள்.

அப்படிக் கடையும்போது, வாசுகியின் முகத்திலிருந்து விஷ ஜ்வாலைகள் கிளம்பலாயின. அந்த ஜ்வாலைகளால் எரிக்கப்பட்டவர்களாய், அசுரர்கள் தம் தேஜஸை இழந்து கொண்டு வந்தார்கள். ஆனால், வாசுகியின் வால் பக்கத்தில் நின்ற

தேவரும் அசுரரும் கடல் கடைந்த கதை



ஸ்ரீ வித்யா மார்த்தாண்ட
பிரம்மஸ்ரீ C. V. ஸ்வாமி
சாஸ்திரிகள்

பிருகஸ்பதி சொன்னார்:

''தேவேந்திரா! பிரம்மதேவர் சாபம், துர்வாசர் சாபம் ஆகிய இரண்டு சாபங்களால் நீ இப்போது பீடிக்கப்பட்டவனாய் இருக்கிறாய். ராஜ்யலக்ஷ்மி உன்னைவிட்டு நீங்கிவிட்டாள். அதனால், மூன்று உலகங்களும் ஸ்ரீயை இழந்துவிட்டன. யஜ்ஞங்கள் நடக்கவில்லை. இமயங்கள், நியமங்கள், தபஸ் இவற்றை பிராமணர்கள் கடைப்பிடிக்கவில்லை. பூமியில் பயிர்கள் முளைக்கவில்லை. சூர்ய சந்திரர்கள் மங்கலான ஒளி உடையவர்களாக இருக்கிறார்கள். ஹவிஸை அருந்தாமல் அக்கினியும் ஒளி குன்றியவனாய்க் காணப்படுகிறான். காற்று புழுதி கலந்து வீசுகிறது. ஆகாயமும் நிர்மலமாக இல்லை. தேவர்கள் பலம் இழந்து விட்டார்கள். சராசரங்கள் அனைத்தும் நாசத்தை நெருங்குவது போல் தோன்றுகின்றன......''

இவ்வாறு பிருகஸ்பதி சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, தேவலோகத்தின் மீது அசுரர்கள் படையெடுத்து வந்து விட்டார்கள்.

அந்த அசுரர்கள், இந்திரனுடைய நந்தனவனத்தை அழித்தார்கள். அங்கிருந்தகாவல்காரர்களைக் கட்டி வைத்து அடித்தார்கள். அமராவதிப் பட்டினத்தின் கோட்டையை இடித்துத் தள்ளி, அதில் இருந்த நவரத்னக் குவியல்களையும் தேவ மங்கையரையும்


DIRECTOR
காளி மார்க்
அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
ஸ்டூடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணககானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த.
புதுமை மாருத. ருசியை
அனுபவிககின்றனா
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமாாக
பானங்கள் அருந்துங்கள்.
Kali mark
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

தீப்பந்தத்தினுல் இருட்டில் உள்ள வஸ்துவும், நடையினுல் தர்மமும், துன்பம் செய்யாமை முதலிய வ்யவஹாரத்தினுல் ஸாதுவும், பயம் நேரிட்டபோது சூரனும், பொருளாதார நெருக்கடியில் தீரனும், பஞ்சம் முதலிய சங்கடங்களும் பெரிய ஆபத்துக்களும் நேர்ந்தபோது மித்ரர்களும் சத்ருக்களும், அறியப்படுவார்கள்.

கிழத்தனம் ரூபத்தையும், ஆசையானது தைரியத்தையும், யமன் பிராணன்களேயும், அஸூயை தர்மம் செய்வதையும், கோபமானது ஸம்பத்தையும், அயோக்யர்களின் சேர்க்கை நல்ல நடத்தையையும், காமம் லஜ்ஜையையும். அஹங்காரம் எல்லாவற்றையும் அபகரித்து விடும்.